(2)

அகிலனின் குதிரை

யாழ். எஸ். பாஸ்கர்

WROUGHT IRON ARTICLES
WROUGHT IRON GATES & FENCING
WROUGHT IRON SECURITY DOORS & GRILLES
WROUGHT IRON MACHINES MANUFACTURE
ALUMINIUM & STEEL FENCING
ALUMINIUM DOORS & WINDOWS
SECURITY LOCKS
HOME REPAIRS & MAINTENANCE

இரும்புத் தளபாடங்கள்
இரும்பு 'கேற்'கள் - வேலிகள்
இரும்புப் பாதுகாப்புக் கதவுகளும் கிறில்களும்
இரும்பு மெஷின் தயாரிப்புகள்
அலுமீனியம் - உருக்கு வேலிகள்
அலுமீனியம் கதவுகளும் ஜன்னல்களும்
பாதுகாப்புப் பூட்டுகள்
வீட்டுத் திருத்த வேலைகள்

RAS INDUSTRIES PTY LTD

QUALITY BY PERFORMANCE

FACTORY 4, 38 AMBERLEY CRESCENT
DANDENONG, VICTORIA 3175, AUSTRALIA
TEL (03) 706-7401 A.H. (03) 793-5857



ராஸ் இன்டஸ்ரீஸ் பிரைவேட் லிமிட்டட்

வேலைப்பாடுகளில் திறமை

தொழிற் கூடம் 4, 38 அம்பேர்லி கிறசென்ற்
டான்டெனொங், விக்டோரியா 3175, அவுஸ்ரேலியா
தொலைபேசி (03) 7401 (03) 793-5857

இவள் பாலைவனத்து ரோஜா.....

அழகி; ஆனால், அகதி!

வடகிழக்கு ஆபிரிக்காவின் பாலைவனப் பகுதிகளிலே, நாடோடி இனங்களுள் ஒருத்தியாக, இவள் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தாள். அவளுடைய தேவைகள் சொற்பம். ஆசைகள் எளியன. அமைதித் தென்றல் அவள் நெஞ்சிலே தவழ்ந்தது. அழகியாகப் பூத்தாள்!

'ஆபிரிக்காவின் கொம்பு' (HORN OF AFRICA) என்றழைக்கப்படும் பகுதியில், செங்கடலை ஒட்டினாற் போல எதியோப்பியா, எரிட்றியா, சோமாலி, டிபியூட்டி (DJIBUTI) ஆகிய நாடுகள் இருக்கின்றன.

டிபியூட்டி ஒரு சிறிய நாடு. முன்னர் பிரஞ்சுக் காலனியாகத் திகழ்ந்தது. அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகத்தினால், அகதி முகாம்கள் பல அமைக்கப் பட்டுள்ளன, அவற்றிலே குவிந்துள்ள அகதிகளுள் இவளும் ஒருத்தி.

அவளுடைய ஒளிபடைத்த விழிகளிலே உலர்ந்திடாத கண்ணீர், அகதிகளுடைய சோக அவலங்களை மௌன பாஷையிலே சொல்லுகின்றது, இந்தப் பாலைவனத்து ரோஜாவின் கண்ணீரைப் பார்க்கும் பொழுது, மனித நேயங் கொண்டஉள்ளங்களிலே, 'உன் கண்ணில் நீர் வழிந்தால்- என்னெஞ்சில் உதிரங் கொட்டுதடீ' என்ற உணர்வு ஏற்படுதல் நியாயம்,

Photo Courtesy
AUSTCARE & UNHCR

அக்கினிக்குஞ்சு

புலம பெயர்ந்த ஈழத் தமிழரின்
சர்வதேச கலாசார இலக்கிய மாசிகை
பிரதம இலக்கிய ஆலோசகர் :
எஸ்.பொ
ஆசிரியர்:
யாழ் . எஸ்.பாஸ்கர்
துணை ஆசிரியர்கள்:
ரி.தர்மகுலசிங்கம்
இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்
அவுஸ்ரேலியா
பிரியா பப்ளிகேஷன்ஸ்ஸுக்காக
ஏ ஆர் பிரிண்ட்ஸ் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
எம்.ஏ. ரஹ்மான்

கதைகளிலேவரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே; கட்டுரையாசிரியரின் கருத்துக்கள், 'அக்கினிக்குஞ்சு'வின் கொள்கையை பிரதிபலிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

INTERNATIONAL CULTURAL AND LITERARY MONTHLY OF DISPLACED EELAM THAMILS.
Chief Literary Advisor : Espo
Editor : Yal S.BASKAR
Australia
(03) 555 - 3230
Deputy Editors:
T. Tharmakulasingam
DENMARK
(75) 588- 512
Ilampirai M.A.Rahman
MADRAS- INDIA
P.P. 420011.
Correspondence contribution & subscription address
PRIYA PUBLICATIONS ☐ P.O.BOX 470
☐ MOORABBIN ☐ VIC -3189 ☐ AUSTRALIA

நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்

மனம்விட்டு பேசுவோம்

'அக்கினிக் குஞ்சு' வின் முதல் இதழ் நமக்கு நிறைவைத் தர வில்லை என்பதை எடுத்த எடுப் பிலேயே கூறிக்கொள்ள நாம் கூச்சப்படவில்லை. சுய விமர் சனஞ் செய்யும் பக்குவம் வளர்ச் சிக்கான ஏணிப்படி. நாம் மனக் கண்ணிலே உருவாக்கியுள்ள 'அக் கினிக் குஞ்சு' வின் உள்ளடக்க வீறினையும், உருவ வனப்பினை யும் பொருத்துவதற்கு இன்னும் பாரிய உழைப்பும், சத்திய அக்க றையும், சீரிய எழுத்து ஆற்றல் களும் சங்கமித்தல் வேண்டும். இவற்றை நாம் அறிவோம். உங் களுடைய இனிய ஒத்துழைப்பு டன், இவற்றை இணைத்து ஈழத் தமிழர்தம் இலக்கியத் துறை யிலே புதியதொரு சகாப்தத்தி னைக் குறிக்கும் வகையில் 'அக் கினிக் குஞ்சு' வை உருவாக்கு வதிலே அயராது, சோராது உழைப்போமென உறுதி தருகின் றோம்.

கடிய, நெடிய பயணத்தினை மேற் கொண்டுள்ளோம் என் பதை நாம் அறிவோம். 'பிர பலம்', 'எழுத்தாளர்கள்' என்ற மதிப்பைச் சம்பாதிக்க வேண்டும் என்கிற அற்ப ஆசைகளின் உந் துதல்களினால், நாம் 'அக்கினிக் குஞ்சு' வை வெளியிட விழைந்த தும் இல்லை. மக்களுக்குப் பிரீதி யான 'கொச்சை' களையும் 'இச் சை' களையும், இவ்வகையறாக் 'கொசுறு' களையும் பக்கம் எல் லாம் 'ரொப்பி' வைத்து, இலக் கிய வீறுகளை விதையடித்து; யாவாரப் பெருமை பேசும் 'குமுத' மான இலக்குகளும் எங்களுக்கு இல்லை. ஈழத் தமி ழர்தம் இலக்கிய நேசிப்பினைப் பொதுவாகச் சங்கை செய்யும் அதேநேரத்தில், புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்தம் கலை-இலக்கிய ஆர்வங்களுக்கும், புதிய ஆக்கங் களுக்கும் சங்கையான பிரசுர களம் அமைத்துக் கொடுத்தல் நமது பணியின் பிரதான இலக்கு என்பதை மீண்டும் வலியுறுத்து கின்றோம்.

இதனை வலியுறுத்தும் அதே வேளையில், இதனைச் சாதனை யாக்கும் நமது சாதனங்கள் எல் லைக் கட்டுடையவை என்பதை யும் உணருகின்றோம். நமது தொடர்புகள் விசாலமானவை யாக அகன்றும், விரைவானவை யாக செறிந்தும்புதிய பரிமாணம் பெறுவதின் மூலமே, 'அக்கினிக் குஞ்சு' வின் சர்வதேசக் கோலம் முழுமை அடையும். இதனைச் சாதனையாக்கும் : பயணத்திலே உங்கள் ஒவ்வொருவருடைய ஒத் துழைப்பும் பங்களிப்பும் மிகவும் முக்கியமானவை. அணிலின் பங் களிப்புக்கூட சேது அணையின் நிர்மாணத்திற்கு உதவியது என் பது நமது தளம்.

எழுத்தாளன் அல்லது கலை ஞன் என்பவன் தானாகப் பிறந்து தவத்தால் கொடியுயர்த்தியவன் என்கிற 'பத்தாம் பசலி' வாதத் திலே நமக்கு நம்பிக்கை கிடை யாது. உண்மையான கலைஞன் தான் வாழும் சமுதாயத்தின் மனச் சாட்சி. அவன் சமூகப் பிரக்ஞையினாலும், சத்திய வேட்கையினாலும் உருவாக்கப் படுகின்றான். ஆக்க முனைப்பு கள் அரங்கேறுவதற்கான களங் கள் கிடைக்காது, அவனுடைய முனைப்பு முளைகள் விதைக்குள் ளேயே அமுங்கிக் கிடக்கலாம். நிலம்-நீர்-ஒலி ஆகிய கரணங் களின் கலவையான விளை நிலத்தை 'அக்கினிக் குஞ்சு' செப்பமிடுகின்றது. விதைகளை ஊன்றிப் பயனைப் பெறுவதற்கு இதனைப் பயன்படுத்தலாம். வாருங்கள், இனி எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள், கலை-இலக்கிய ஆர்வலர்களாக உள்ள உங்களுடைய நண்பர்களையும் உங்களுக்கு இனியவர்களையும் எங்களுடன் தொடர்பு கொள்ளச் செய்யுங்கள். 'அக்கினிக் குஞ்சு' விரதம் பூண்டுள்ள இலட்சியங் களையும் இலக்குகளையும் அடை வதற்கான வழிவகைகள் குறித் தும் உங்கள் ஆலோசனைகளை அள்ளிவழங்குங்கள், 'தழல்வீரத் திற் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ' என்று கேட்டான் பாரதி. 'தமிழ் வீறிலே குஞ்சென் றும் மூப்பென்றும் இல்லை' என் பது நமது கொள்கை. உங்களு டைய மழலை ஆலோசனைகள் கூட, பழைமை என்கிற காட் டினை அழித்து, புதுமை என்கிற கழனி நிலத்தை உருவாக்கக் கூடிய சிந்தனைப் பொறிகளைக் கொண்டிருக்கும் என மனசார நம்புகின்றோம். நமது வாசகர்கள் அனைவரையும் அக்கினிக் குஞ்சு வின் குடும்பத்தினராகவே நாம் பாராட்டுகின்றோம். மக்கள் ஆலோசனைகளை மகேஸ்வர ஆணைகளாக நாம் போற்று வோம். எனவே, எங்களுடன் தொடர்பு கொள்ளவும், ஆலோ சனைகள் என்கிற அன்புத் தொல்லைகளால் மூழ்கடியுங் கள். எங்களுக்குத் தெரியும் உங் களுடைய ஆலோசனை மழை அக்கினிக் குஞ்சுவுக்குத் தேவை யான ஆகுதி என்பது; உங்களு டைய ஆலோசனைகளிலே மணி யானவற்றைப் பிரசுரித்து, உங் கள் ஆசையாகவும் நமது வாய்மை யாகவும் பிரசித்தப்படுத்துவோம்! பிரசித்தமானவற்றைக் காரிய சாதனை யாக்குவதற்கு நம்மை அர்ப்பணிப்போம்.

புலம் பெயர்ந்து, ந ள் பலவற்றிலும் சுதறிக் கிடக்கும

–யாழ்.எஸ் பாஸ்கர்

புதிய ஆற்றல்களைத் திரட்டி, கோவைப் படுத்தி, பிரசுரிப்பதிலுள்ள சிரமங்களை நீங்கள் அறிவீர்கள். 'அக்கினிக் குஞ்சு' வின் எல்லைக் கட்டுடைய மக்களுக்கிடையில், சங்கதிகள் அனைத்தையும் சர்வதேசப் பண்புகள் மாசறமருவும் வகையில் இணைத்துப் பிரசுரிப்பதிலுள்ள சிரமங்கள் நாம் அறியாதன அல்ல. இந்நிலையில், குறிப்பிட்ட ஒரு நாட்டிலே புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர் மத்தியிலே முகிழும் கலை- இலக்கிய முனைப்புகளுக்கும் சாங்கங்களுக்கும் முதன்மை அளிக்கும் வகையில் சிறப்பு மலர்கள் வெளிக் கொணரும் நோக்கமும் நமக்கு உண்டு,

டென்மார்க் நாட்டிலே வாழும் ஈழத் தமிழர்களுடைய கலை- இலக்கிய ஆர்வங்களையும் வண்ணங்களையும் தொகுக்கும் வகையில் சிறப்பு மலர் ஒன்றினைத் தயாரிக்கும் பணியில் நமது துணை ஆசிரியர்களுள் ஒருவரான **ரி. தர்மகுலசிங்கம்** அவர்கள் ஈடுபட்டுள்ளார் என்ற செய்தியை அறியத் தருவதிலே மகிழ்கின்றோம். நாட்டுக்கு ஒரு சிறப்பிதழ் தயாரிக்கும் நமது திட்டத்தின் முன்னோடியாக அது அமையும். ஏனைய நாடுகளுக்கும் சிறப்பிதழ்கள் தயாரிப்பதிலே உதவக்கூடிய அன்பர்களும் ஆர்வலர்களும் விரைந்து தொடர்பு கொள்ளும்படி வேண்டுகிறோம்.

அன்ப, 'அக்கினிக் குஞ்சு' எங்களுடைய சொந்தப் பத்திரிகை என்கிற பந்த பாச உணர்ச்சிகளை வளர்த்து, அதன் வளர்ச்சியின் சகல தளங்களிலும் ஆதரவு நல்குங்கள் என்பது நமது யாசகமாகும்.

வணக்கம்

அட்டைப் படத்துக்கு மேலும் விளக்கம்

எளிமையான வாழ்க்கையிலே குபேர இன்பங் காணுதல் டிபியூட்டி நாட்டில் வாழும் மக்களின் சுபாவம். இந்த அப்பாவியான மக்கள் மத்தியிலே, வல்லரசுகள் தங்களுடைய பழைய துருப் பிடித்த ஆயுதங்களை விற்பதற்காக, இனக்குழுக்களுக்கிடையில் வேறுபாடுகளை வளர்த்து, ஜாதித் தலைவர்களுக்கு ஆதிக்க ஆசைகளைத் தூண்டி உள்நாட்டுக் கலகங்களையும் சண்டைகளையும் தோற்றுவிப்பதில் வெற்றி பெற்றுள்ளார்கள். கடந்த ஒரு தசாப்த காலமாக இந்தப் பகுதிகள் யுத்த பூமியாக பேரழிவுகளைக் கண்டு கொண்டிருக்கிறது. 'பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல' என்று நம்மவர்கள் சொல்வார்கள். இந்தப் பகுதிகளிலே தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பருவமும் பொய்த்தது. மறுபுறத்தில், பஞ்சமும் இந்த மக்களை துரத்திக் கொண்டிருக்கின்றது. உள்நாட்டுப் போர்களும், பஞ்சமும் இந்தப் பகுதிகளிலே பல்லாயிரக் கணக்கான அகதிகளைத் தோற்றுவித்துள்ளது.



நேர்த்தியாகவும்
கலையழகு மிளிரும்
வண்ணக் கலவையாகவும்

அச்சு வேலைகள்

செய்திட

தமிழ் நூல்கள்

பதிப்பிட
அணுகுங்கள்

ARprints

375-8, Arcot Road
Kodambakkam
MADRAS 600 024 INDIA
Call : PP 420011

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார்

பாரதிதாசன் சிறப்புக் கட்டுரை

தமிழனின் ஒரே கவிஞன்

–பேராசிரியர்

சாலய் இளந்திரயன்

1930ஆம் ஆண்டுச் சமயம் அது. ஒரு கவிஞன் தன்னைச் சுற்றிலும் பார்த்தான்; தமிழகத்தின் நடவடிக்கைகளைக் கவனித்தான். அதில், என்றும் இல்லாத,- அதாவது சுமார் 2000 ஆண்டுகளாக இல்லாத- ஒரு புதிய எழுச்சி திமிர்ந்து பரவுவது அவனுக்குப் புலப்பட்டது, அவன் உள்ளம் எல்லையில்லா இன்பத்தில் குதித்து நீந்தியது அவன் வாய், அவனுடைய இதய உணர்ச்சியை எழுப்பி முழக்கியது:''தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ மக்கள், தமிழ் என்னும் பேருணர்ச்சி,- இந்நாள் போலே தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை:''...

இப்படி எழுந்து நின்று எம்பிக் குதித்து முழக்கமிட்டவன்தான் சுப்புரத்தினப் புரட்சிக் கவிஞன். சுப்புரத்தினக் கவிஞன் மனிதனைப் பற்றிச் சிந்தித்தான்; அந்த மனிதனில் தமிழ் மனிதனை அடிப்படையாக வைத்துச் சிந்தித்தான். சுப்புரத்தினக் கவிஞன் மேன்மைகளைப் பற்றி சிந்தித்தான்; அந்த மேன்மைகளில், முதிர்வும் கனிவும் உடைய தமிழரின் மேன்மைகளை முதன்மைப்படுத்திச் சிந்தித்தான். சுப்புரத்தினக் கவிஞன் தன் காலத்து மக்கள் அனைவரைப் பற்றியும் சிந்தித்தான்; அவர்களில் தமிழ்மக்களை முதன்மைப்படுத்தி தனது வாழ்வியல் கருத்துக்களை வடித்து எடுத்தான். தமிழ் வாழ்வில் இந்தக் கவிஞன் அக்கறை காட்டாத பகுதி என்று ஒருசிறிய பகுதி கூட இல்லை; அவ்வாறு அக்கறை காட்டி அவன் தொட்டுக் காட்டிய தமிழ் வாழ்வுப் பகுதிகளில் புதிய துடிப்புடன் நிமிர்ந்து துலங்காத வாழ்க்கைப் பகுதி எதுவுமே இல்லை!...

இதோ புரட்சிக் கவிஞன் பாடுகிறான் கேளுங்கள்:

உயர்தமிழ் உயர்நடை உயர்தனி வீரம்
இங்கிவை தமிழரின் உடைமை;
அயர்வுகள் தீர்ந்தன, புதுமையில் உலகை
ஆள்வது தமிழர்கள் கடமை,

'வீரத் தமிழன்' என்னும் தலைப்பிலே ஒரு பாட்டு; இந்தக் கவிஞன் நெஞ்சு நிமிர்த்தி நின்று எடுத்து முழக்கும் பாட்டு. அந்த ஒரே பாட்டில் இவன் தமிழனின் கவிஞன்,- தலைமை சான்ற தகைமை சான்ற ஒரே தமிழ்க் கவிஞன் என்னும் உண்மை எழுத்துக்குஎழுத்து எக்களித்துப் பொங்குகிறது. பாரதப் பண்பாடு என்பதன் பேரால்- பாரதத்தின் பழம் பெரும் இதிகாசங்கள் என்பவைகளின் பேரால் மாபெரும் தீயவனாகச் சித்திரித்து பரப்பப்பட்டிருப்பவன் மாவீரன் இராவணன். அவனை வஞ்சகத்தால் வென்று, அவனுடைய பேரையும் பெருமையையும் புதைக்கமுயன்ற மாற்றாரின் செயலைத் தமிழ் இன ஒழிப்பின் ஓர் உருவகமாகவே காணுகிறான் புரட்சிக்கவிஞன்.'மாற்றானின் மனைவியை விரும்பியவன்' என்று பொய்க் கதை புனைந்து, அவனுடைய உற்றார் உறவினர்களையே அவனுக்கு எதிரிகளாக எழுப்பி நிறுத்தியிருந்தது ஆரியப் பார்ப்பனீயர், அத்தனை குப்பைகளையும் ஒரே வரியில் (ஒரு பாட்டின்ஒரே ஒரு வரியில்) அள்ளி எறிந்து விடுகிறான் சுப்புரத்தினப் புரட்சிக் கவிஞன்,

தென் திசையைப் பார்க்கின்றேன்;
என்சொல்வேன் - என்றன்
சிந்தையெலாம் தோள்களெல்லாம்
பூரிக்குது அடடா!

ஆமாம்; அயோக்கியன் என்று தள்ளப்பட்டவன், அந்த ஒன்றுக்காகவே தனது அனைத்துப் பெருமைகளையும் பலியிட்ட அறிவிலி என்று ஒதுக்கப்பட்டவன் இராவணன். அவனை நினைத்தால் தன்னுடைய சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிப்பதாகச், சொற்களிலே முறுக்கேற்றி முழக்கமிடுகிறான் இக்கவிஞன். ஏன் புதைக்கப்பட்ட

இராவணத் தமிழ் மாவீரத்தை இனம் கண்டு கொண்டால் தமிழ்இனம் ஏற்றமுறும், தனது இயல்புத்தடத்தில் நடைபோடத் தொடங்கிவிடும் என்று உறுதியாக நம்புகிறான் கவிஞன். எனவே அவனை நினைவுகூர்ந்து உள்ளமும் தோளும் பூரிக்கின்றான். அந்தப் பூரிப்பு தமிழர் அனைவர் நெஞ்சிலும் பொங்கிவர வேண்டும் என்றும் விரும்புகிறான்; அந்த விழைவைப் பாட்டாக எடுத்து முழக்குகிறான்.

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்!
விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்!
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தொகையாக எதிர்நிறுத்தித் தூள்தூளாக்கும்
காழ்ச்சிந்தை, மறச்செயல்கள் மிகவும் வேண்டும்!
கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்!
கீழ்ச் செயல்கள் விடவேண்டும்!'ராவணன்தன்
கீர்த்தி சொல்லி அவன் நாமம் வாழ்ந்த வேண்டும்!

ஓர் இனத்துக்கும் அதன் எழுச்சிக்கும் என்னென்ன தேவையோ அவைகளை எல்லாம், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சுட்டிக் காட்டிக் கொண்டுவந்த கவிஞன், - இந்த ஒரே பாடலில் அவை அத்தனையையும் மீட்டு நினைத்துக் கொட்டிக் குவித்து வைத்திருக்கிறான்!

மேலே காட்டிய பாட்டடிகள் அனைத்திலும் தமிழினத்தின் மேன்மை கமழ்கிறது; தமிழ் இனத்தின் கடந்தகால வரலாறு குரல் கொடுக்கிறது; இத்த இனத்தின் இக்கால நிலைமை சித்திரமாக எழுகிறது; இந்த இனத்தின் பெருமை அழிக்கப்பட்ட வரலாறும், அங்கங்கே ஒருசிலர் அதை எதிர்த்து நின்ற வரலாறும் ஒலிக்கிறது. இவைகளின் தொகுவிளைவாக, தமிழினத்தின் அனைத்துக் கூறுகளும் செப்பனிடப்பட்டு, சீர்மை துலக்கப்பட்டு, புதிய ஊட்டம் தரப்பட்டு, இந்த இனமேதலைமை இனமாகத் தலையோங்க வேண்டும் என்கிற கவிஞனின் தனியாத ஆவல் வலிமையாக வெளிப்படுகின்றது. எனவே இவன் கவிஞன், தமிழனின் ஒரே கவிஞன்...

(16-3-91 ல் சென்னையில் வெளியிடப்பட்ட ''தமிழனின் ஒரே கவிஞன்'' என்னும் பெருநூலின் ஒரு சிறு பகுதி.) ✱

✱ சட்ட மாணவனுக்கு ஆலோசனை: சம்பவங்கள் உன் சார்பாக இருந்தால் ஜூரியைப் பார்த்து விளாசு. சட்டம்உன் பக்கமிருந்தால் நீதிபதியைப் பார்த்து நெருக்கு. இரண்டுமில்லையென்றால் மேசை மீது ஓங்கிக் குத்து.

-சோமசெட் மோம்

ஒற்றுமை

நாற்புறம் கடல்கள் சூழ்ந்த
நிலத்தினைத் 'தீவு' என்போம்,
நாற்புறம் கடல்நீர் வெள்ளம்;
நடுவிலோர் கண்ணீர் வெள்ளம்,
மேற்படி அதிச யத்தை
மேதினி எங்கும் நீங்கள்
பார்த்தது உண்டோ? இலங்கைப்
பூமியின் கோரம் பாரீர்!

தேசியம் என்னும் பேச்சைத்
தினந்தினம் பேசித் தீர்ப்பார்;
தேசியந் தன்னை நம்பும்
தமிழரின் குரலைக் கேளார்!
வீசுது தமிழர் பிணத்தின்
வாடையே, சொல்ல வும்நா
கூசுது, பெண்கள் கற்பைக்
குதறிடும் நாய்களங்கே!

அரசியல் வியாபாரத்தை
அருமையாய் நடத்துவோர்க்குக்
கரீசன நெஞ்சும் இல்லை;
கடமையோ அவர்க்குத் தொல்லை!
பிரிவினை இந்த அரசின்
பார்வையில் எதிர்பாராமல்
பிரிந்துன அணிகள் சேர்ந்தால்
பெரியதோர் வெற்றி கிட்டும்!

பொறுத்திடச் சொல்லும் எமது
'புண்ணிய' அரசு! நீவிர்
ஒறுத்திட வேண்டும் பகையை
ஒற்றுமை யாக நின்று!
அறுத்திட வேண்டும் உறவை
ஆங்குள அரசி னின்று!
சரித்திரம் காண வெண்டும்
'தனித்தமிழ் ஈழம்' வென்று!

-வித்தகன்
இந்தியா

✱

தேவதையின் கீதம்

எங்கெங்கும் பொங்கியெழும்
எங்களது இளங்குலமே
நேர்மையுடை யீரேல்
நீங்களெல்லாம் எங்களது
நீளணியில் வாருங்கள்
வந்தெமது பாடல்களை
வளம் குலுங்கப் பாடுங்கள்.

-ரஷ்யக் கவிதை
வெ. முருகபூபதியின்
'சமதர்மப் பூங்காவில்' நூலிலிருந்து

அனலும் மலரும்

கொண்டோடி சுப்பரின் மேடைக்கதையிலிருந்து – 1970

அது கெட்டியான கடவுள் நம்பிக்கையுள்ள கிறிஸ்தவக் குடும்பம். தந்தை - தாய் - ஒரு மகன் ஆகியோர் அடங்கிய அக் குடும்பத்தினர் அதி சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். அன்று ஞாயிற்றுக்கிழமை. அவர்களுடன் அளவளாவ பாதிரியார் ஒருவர் வந்திருந்தார். அவர் வந்து சேர்ந்த நேரம் தாயும் தந்தையும் பிற்கட்டிலே ஏதோ அலுவலாக இருந்தார்கள். மகன் மட்டும் முற்கட்டில் இருந்தான்.

''அப்பாவும் அம்மாவும் உள்ளே இருக்கிறார்கள் அழைத்து வரட்டுமா?'' என்று பையன் பவ்வியமாகக் கேட்டான்.

''வேண்டாம், மகனே! அவர்கள் தங்களுடைய அலுவலை முடித்து வரும்வரையில் நான் காத்திருக்கின்றேன்'' என்று கூறி ஒரு நாற்காலியில் பாதிரியார் அமர்ந்தார்.

பையனுடன் ஏதாவது பேசிக் கொண்டிருப்போம் என்று நினைத்த பாதிரியார், ''நீர் எத்தனையாம் வகுப்புப் படிக்கின்றீர்?'' எனக் கேட்டார். ''மூன்றாம் வகுப்புப் படிக்கின்றேன்...'' என்று பையன் உற்சாகமாகப் பதிலளித்தான்.

''கெட்டிக்காரன். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்ல முடியுமா?'' என்று பாதிரியார் பீடிகை போட்டார்.

''கேள்வியைக் கேளுங்கள். தெரிந்தால் பதில் சொல்லுகிறேன்'' என்றான் பையன் துடுக்குடன்.

''கடவுள் எங்கே இருக்கிறார்? சொல் பாக்கலாம்...''

''எனக்குத் தெரியுமே! கடவுள் மலசல கூடத்தில் இருக்கிறார்'' என்று பையன் சற்றும் சிந்தித்துப் பாராமல் பதிலளித்தான். பாதிரியாரின் முகம் ஏமாற்றத்தில் இருண்டது. 'நல்ல கிறிஸ்தவக் குடும்பத்திலுள்ள இந்தப் பையன், இவ்வாறு கூறுகின்றானே... இது சாத்தானின் வேலையாக இருக்குமோ' எனப் பலவாறு பாதிரியாரின் உள்ளம் துயருற்றது.

கடவுள் மலசலகூடத்திற்குள் இருக்கின்றான் எனப் பையன் கூறியதற்குக் காரணம் இதுதான் :

அவனுடைய தந்தையும் தாயும் வயிற்றுக் கடுப்பு வியாதிக்காரர். தாய் மலசல கூடத்திற்குள் இருக்கும் பொழுது, தந்தை வயிற்றுக் கடுப்பினால் அவஸ்தைப்பட்டு, ''ஐயோ, கடவுளே! நீ இன்னமும் அதற்குள் தான் இருக்கின்றாயா? சீக்கிரம் வாயேன்!'' என்று கூச்சல் போடுவார்.

அவ்வாறே, தந்தை மலசல கூடத்திற்குள் இருக்கும் பொழுது ''ஐயோ, கடவுளே! நீங்கள் இன்னமும் அதற்குள்தானா? ஜெபமா செய்கிறீர்கள்? சீக்கிரம் வாங்களேன்!'' என அம்மா சத்தம் போடுவாள்.

இக்கதையை விபரித்த கொண்டோடி சுப்பர் ''கடவுள் மலசல கூடத்திற்குள் இருக்கும் சங்கதியைக் 'கண்டுபிடித்த' பையனைப் போலத்தான், தம்மை இலக்கிய விமர்சகர் எனக் கூறிக் கொள்ளும் சிலர், முற்போக்கு இலக்கியத்திற்கான இலக்கணங்களைக் கூறி வருகின்றார்கள். அவர்களுடைய சவலைக் கூற்றுக்களைக் கேட்கும் பொழுது தரமான புலமையுள்ள இலக்கியகாரர் பாதிரியாரைப் போல மனந்துயருற வேண்டியிருக்கிறது எனக்கூறி வேறு விடயத்திற்குத் தாவினார்.

பாவேந்தர் ஒரு நிலா

நீ நிலா!
தமிழ்வானில் புறப்பட்ட
தணற் கொப்புளங்களுக்கு
ஒத்தடங் கொடுக்கப்
புறப்பட்ட உலா!

வெடிகுண்டு விருத்தங்களை
வீசியதால் தமிழர்க்கு
விடிவுண்டு பண்ணிய
வெண்ணிலா!

-மு. மேத்தா

ஆயுத அரக்கர்களின் கோரத் தாக்குதல்களினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கைப் பெருக்கம் ஒரு புறம் இருக்க— கண் பார்வை இழந்தோர்-கால்-கைகளை இழந்து உடல் ஊனமுற்றோர் எண்ணிக்கையும் எமது தாய் மண்ணில் அதிகரித்துள்ளது.

சமீபத்திய புள்ளி விபரங்களின் பிரகாரம்-சுமார் முப்பதினாயிரம் பேர் இவ்விதம் அங்கவீனர்களாகியுள்ளனர். இவர்களின் சோகக் கதைகளை எழுத்தில் வடிக்க வார்த்தைகள் இல்லை,

தாக்குதலின் போது நாமும் இறந்திருக்கலாம்-ஏன் தான் இப்படி உடல் ஊனமுற்ற நிலையில் அவதிப்படுகிறோமே எனத் தம்மைத் தாமே மனம் நொந்து

நேசம் நாடும் நெஞ்சங்கள்

லெ. முருகபூபதி

கண்ணீர் வடித்து அங்கலாய்த்து கொண்டிருப்போரும் இவர்களில் அடங்குவர்.

இந்த பரிதாபத்துக்குரிய ஜீவன்களுக்கு நம்பிக்கை ஒளி அளிக்கும் நிறுவனமாக-யாழ்ப்பாணம் அன்னையர் முன்னணியின் செயற்கை கால் பொருத்தும் திட்டம் உருவாகியுள்ளது ஜெய்ப்பூர்- செயற்கைக் கால் உருவாக்கும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பலருக்கு செயற்கைக்கால்களை வழங்கி-வாழ்வில் தன்னம்பிக்கையை வழங்கி வருகிறது யாழ் அன்னையர் முன்னணி.

இன்றைய கால கட்டத்தில்- வெறும் வாய்ச் சொல் வீராங்கனைகளாக வாழாமல்- அமைதியாக இருந்து ஆக்கபூர்வமான பணியினை மேற்கொண்டு வரும் யாழ். அன்னையர் முன்னணி ஏனைய சமூக-சமய நிறுவனங்களுக்கு முன் மாதிரியானது என்றும் சொல்லலாம்.

ஆயுத செயற்கைக் கால் பொருத்தும் திட்டத்திற்கு அவசர உதவி தேவைப்பட்டுள்ளது. ஈழ மண்ணின் இனப் பிரச்சினையினால் இடம் பெயர்ந்து அந்நிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளவர்களுக்கு நாம் முன்பே கூறியபடி சில தார்மீகக் கடமைகள் உண்டு.

அந்நிய மண்ணில் அடைக்கலம் புகுந்தோர் தமது பொருளாதார தேவைகளை பெருக்கிக் கொள்வதிலும் தமது சொந்த பந்தங்களையும் தம்முடன் அழைத்துக் கொள்வதற்கு ஊக்க மெடுப்பதிலுமே பெரிதும் அக்கறையாகசெயல்படுகின்றனர்

இவர்களின் இத்தகைய மனப் போக்கு நியாயமானது என்றும் கூற முடியும். அதே சமயம். ''எமது சொந்த தாய் மண்ணை நாம் இப்பொழுதும் நேசிக்கின்றோம்'' என மனசாட்சியினைத் தொட்டுச் சொல்வோமானால்- ''வெறும் வார்த்தை நேசிப்பாக'' இராமல்- அந்த மண்ணில் அவலப் பட்டுக்கொண்டிருப்போருக்கு ஏதாவது வழியில் கை கொடுப்பதே- எம்மைநாம் மனி ர்கள் என அழைத்துக் கொள்வதற்கும் அர்த்தம் இருக்கும்.

இவ்விதம் கை கொடுத்து உதவுவதற்கு நாம் பல நூறு வெள்ளிகளைத்தான் வழங்க வேண்டுமென்பதில்லை, தியாக சிந்தையுடன் -எமது ஆடம்பர செலவீனங்களை குறைத்துக் கொண்டு-அதில் ஒரு சில சதவீதங்களையேனும் மேற்படி செயற்கை கால் பொருத்தும் திட்டத்திற்கு வழங்கி உதவினால் அதுவே போதும்.

இன்று வெளிநாடுகளில் நம்மவர்கள் நடத்தும் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் - திருமண நினைவு நாள் வைபவங்கள் - கிறிஸ்மஸ் - புதுவருடவிருந்து உபசாரங்கள் - ஒன்று கூடல்கள் முதலான களியாட்டங்களிலெல்லாம் நம்மவர்கள் எத்தனையோ வெள்ளிகளை விரையம்பண்ணிதிருப்தியடைந்து கொண்டிருக்கிறார்கள்.

இதனால் இவர்கள் ஆன்மீக அமைதி அடையப் போவதில்லை

இத்தகைய நிகழ்வுகள் அவர்களின் வாழ்க்கையின் ஒருபகுதி தேவையாக ஏற்கப்பட்டபோதிலும் - இந்நிகழ்வுகளில் - ''மதுக் கிண்ணங்களை'' ஏந்திக்கொண்டு சொந்த தாய் மண்ணைப்பற்றிய தத்துவ விசாரம் நடத்துவோரையும் காண்கின்றோம்.

இப்போலித்தனங்களிலிருந்து நாம் விடுபட வேண்டுமானால்- இத்தேவைகளுக்கு ஒதுக்கும் ''வெள்ளிகளில்'., ஒரு சில சதவீதங்களையேனும்-யாழ் அன்னையர் முன்னணி போன்ற அமைப்புகள் நடத்தும் நிறுவனங்களுக்கு வழங்கி உதவ முடியும்.

ஒரு செயற்கைகால் பொருத்துவதற்கு தேவைப்படும் நிதி இலங்கை நாணயத்தில் ஆயிரம் ரூபா தான். இதனை எமது வெள்ளி நாணயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

எனவே நாம் வழங்கப்போவது சொற்பமே. நாம் வீண்விரையம் செய்யும் வெள்ளிகளுடன் ஒப்பிடும் போது - இத்தொகை மிகமிக சொற்பமே.

எனவே - கால் இழந்து பரிதவிக்கும் ஜீவன்களுக்கு கைகொடுத்து உதவ முன்வாரீர்.

உதவ விரும்புவோர் -தமது ட்ராப்டுகளை -காசோலைகளை- கணக்கு இலக்கம் 12833 -கொமர்ஷியல் வங்கி லிமிடேட் -யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

The Hony Treasurer
JAIPUR FOOT WORK SHOP.
5. Old Park Road.
JAFFNA-SRILANKA.

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

அக்கினி–1 மார்ச் குஞ்சு–2 1991

புதிய பாதை காண்போம்

பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி எனும் பெற்றியை அறிந்தாரேல், மானம் துறந்தும், அறம் மறந்தும், பின் உயிர் கொண்டு வாழ்வது சுகம் என்று மதிப்பாரோ? ஒரே கேள்வியில் விடுதலை வெறியனின் தரிசனம் பாரதிக்குக் கிட்டுகிறது.

விடுதலை வீறு தனி இயக்கத்தின் ஏகபோகமல்ல. விடுதலை நமது பிறப்புரிமை. எனவே, அதனை ஒரு சாராரின் யாகமென்றும் கூறுதல் அபத்தம். எனினும், அளப்பரிய இழப்புகளின் மத்தியிலும், ஈழத் தமிழரின் வீர ஓர்மைக்குக் கட்டியம் கூறும் கூட்டத்தினரை ஒழித்துக் கட்ட 'ஐந்தாம் படை'யாகவும், 'கூலி'ப்படையாகவும் செயற்படுவதிலே எங்கே முளைத்தது வீரம்? எங்கே கிளைத்தது விவேகம்? 'என் மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை' பிரதானம் என்ற போக்கு நகைப்பிற்கிடமானது. விடுதலைக்கு விரோதமானது.

ஈழநாட்டிலே, இன மானத்துடன் வாழுதல் வேண்டும் என எழுந்துள்ள எழுச்சி நியதி மட்டுமல்ல, நிர்ப்பந்தமும்கூட! சீவர ஆடைகள் வேள்விமந்திரங்கள் உச்சாடனஞ் செய்ய, சிங்கள ராணுவம் நரவேட்டை ஆடுகின்றது. கற்பகத் தோட்டத்தில் குண்டு மழை பெய்கிறது. சிங்களக் காடைத் தனத்தின் கண்டு பிடிப்பான் 'மலக் குண்டுகள்' வீசப்படுகின்றன. பசி விதைக்கப்படுகின்றது. நோய்கள் பரப்பப்படுகின்றன. எம் தந்தையும் தாயும் குலவி இருந்த மண், மெதுவாக. ஆனாலும் நிச்சயமாக, சுடுகாடாக மாற்றப்படுகின்றது இத்தனை அட்டூழியங்களும் 'புலி வேட்டை' என்ற பெயரால் நியாயப்படுத்தப்படுகின்றது. தமிழரது இனமானத்தை ஒழித்துக் கட்டிட அத்தனை சிங்களக் கட்சிகளும், பிக்குகள் சக்திகளும், ராணுவம் ஒரே அணியில் திரண்டுள்ளன. தமிழ் உயிர்களை பட்சிக்கும் கழுகுகளின் ..... இந்த நிலையிலும், கொழும்பிலே 'அரசியற் கடைகள்' திறந்து, சாயம் வெளுத்துக் கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு 'வெள்ளை கட்டி' அலங்காரஞ் செய்ய முனையும் பிரேமதாஸாவுக்குத் துணைபோகும் ஈனச் செயலிலே எவ்வாறு பிறந்திடும் இன மானம்? எவ்வாறு விடிந்திடும் நம் வாழ்வு?

இத்தனை அவலங்களும் சொந்த நாட்டிலே நடக்கும் பொழுது, புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் வாழும் ஈழத் தமிழர்கள் என்ன செய்கிறார்கள்? கலாசாரப் 'பாலம்' அமைப்பதாகப் 'பாவலா'ப் பண்ணி, 'சினிமா' விலே குளிர் காயும் கலைஞர்களுக்குச் செங்கம்பளம் விரித்து, கூத்துகள் ஆடுகின்றார்கள்! இதனால் ஈழத் தமிழர் தம் தனித்துவ கலாசாரம் எவ்வாறு பேணப்படுகின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. கண்கள் இரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற் கை கொட்டிச் சிரியாரோ? நிச்சயம் சிரிப்பர்!

ஈழநாட்டிலே தமிழர் நடாத்தும் அரசியல் தில்லு முல்லுகளை உடைத்துச் சுதந்திர சுயீட்சத்தைத் தரிசிப்போமா? புலம் பெயர்ந்த நாடுகளிலே நடத்தப்படும் கலாசார தில்லுமுல்லுகளை அறுத்து, ஈழத் தமிழர் தம் கலாசார வளர்ச்சியிலே புதிய சிகரங்களைத் தொடுவோமா?

தரிசித்தலும் தொடுதலும் முடியும். 'முடியாது' என்ற சொல்லை அகராதியிலிருந்து அகற்றுவோம். முதலில் நமது மனதில் உறுதி வேண்டும். அடுத்து நமது சிந்தனையில் தெளிவு வேண்டும். இதனால் புதிய பாதையொன்று முகிழ்ந்திடும் என்பது நம்பிக்கை.

அக்கினிக் குஞ்சு

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தத்தோம்.

நியாயாதிகள்...

— அருணன் விஜயராணி

''சொல்லு...எங்க இருக்கு உண்ட மவன்?''

''நீ சொல்லு மட்டும்... நாங்க, ஒன்னை அடிச்சிக்கிட்டுத் தான் இருப்பம்''

மாறி மாறி விழும் பூட்ஸ் கால்களின் உதைகளை உடம்பில் ஏற்றுக் கொண்டு, பேசாமல் இருந்தார் குமாரசுவாமிமாஸ்டர்

''ஊமை போல.. ஆக்ட் போட வேணாங்.. சொல்லடா.. எங்க உன்ட மவன்?''

'குமாரசுவாமி மாஸ்டர் அடிக்க மாட்டார். ஆனால், சரியான கண்டிப்பு, அவரின்ர கண் பார்வை ஒன்று போதும், பிள்ளைகள் படிக்குறதுக்கு !'

பள்ளிக்கூடம் அவருக்குக் குடுத்த சேர்ட்விக்கற் இது.

அந்தக் கண்பார்வை கூட... அந்த சிங்கள அதிகாரிகள் முன் தோற்றுப் போய் விட்டது.

அவர் வாய் திறக்க வில்லை.

திறந்தும் பலனில்லை அவருக்கு மட்டும் மகன் இருக்கும் இடம் தெரியுமா என்ன?

''ஒல்ட் மேன் என்றாலும் நல்ல ஸ்டோர்ங்'

கடைசியாக வயிற்றில் விழுந்த உதையுடன் மாஸ்டர் குப்புற விழுந்தார்.

நெற்றியில் இருந்து இரத்தம் சொட்டத் தொடங்கியது.

இப்படி எத்தனை இரத்தங்களை அவர் பார்த்து விட்டார்.

இரத்தங்களும், உயிர்களும் இப்போ சர்வ சாதாரணமாகி...

'' அப்பா... குகனை ஒருத்தரும் என்ர சித்தப்பாவின்ர மகன் எண்டு நம்பினமில்லை. சொந்தத் தம்பியோ எண்டுதான் கேட்கினை...''

'' எண்ட தம்பி எண்டு சொல்லுறது தானே ?''

'' ஓம் அப்படித்தான்... நானும் சொன்னனான் ''

ஒன்றாகவே படுத்து... ஒன்றாகவே விளையாடி... ஒன்றாகவே படித்து... ஒருத்தரை விட்டு இன்னொருத்தர் சாப்பிடாமல்... இராம லக்ஷ்மணரோ என்று மற்றவர்கள் அதிசயிக்கும் வண்ணம்...

கபிலன் சொன்னதும், மாஸ்டர் இருவரையும் சந்தோஷத்துடன் பார்த்துக் கொண்டார்.

தம்பி சின்னத்துரை... போராளிகளுக்கு வைத்தியம் பார்த்ததினால், ஆமிக்காரனின் சூட்டுக்குப் பெண்சாதியுடன் பலியானார். நல்ல காலம். மகன் குகன் விடுதலைக்கு அவர் வீட்டில் நின்றதால் உயிர் தப்பினான்.

''உங்கடை தம்பி நிம்மதியாகத் தான் கண்ணை மூடி இருப்பார். அண்ணா எப்படியும் தண்ட மகனைக் கைவிடமாட்டார் எண்டு அவருக்குத் தெரியும்...''

அவரின் பெண்சாதி இராசம்மாவின் வார்த்தைகளில் பெருமிதம் தெறித்தது.

அன்று அப்படி இராம லட்சுமணனாகத் திரிந்தவர்கள்... எப்படி இடையில் மாறிப் போனார்கள்?

'' நான் படிச்சால் டொக்டருக்குத் தான் ! ''

'' நான் வந்தால் பைலட்டாகத் தான்! ''

உயர்ந்த இலட்சியங்களும் சிந்தனைகளுமாக வளர்ந்தவர்கள்.

''எப்படி இருந்தனீங்கள்... எப்படி மாறிட்டிங்கள்? ''

'' அம்மா... தேசத் தொண்டு பாவமே? ''

இராசம்மாவின் கண்ணீரையும்... பேச்சையும் இருவரும் ஒரே வார்த்தையில் அடக்கினார்கள்.

மாஸ்டர் வாய் திறக்க வில்லை.

டொக்டராகவும்... பைலட்டாகவும் கனவில் வலம் வந்தவர்கள்... தோளில் துப்பாக்கியும்... கைகளில் குண்டுகளுடனும்... ஒரு ஒற்றுமையின்றி... ஒரு நோக்கம் இன்றி... சட்டதிட்டங்களை தமக்குச் சாதகமாக

மாற்றி... மாற்றி...

கண்ணீருடன் 'அண்ணா அண்ணா' என அழும் மகளை பரிதாபமாக பார்த்தார்.

மூன்று கன்றுக் குட்டிகள் துள்ளித் திரிந்த அந்த லீட்டில் இப்போ ஒரு கன்றுக் குட்டி மட்டும் தனியே விம்மிக் கொண்டிருந்தது.

மூன்று மாதத்துக்கு... ஆறு மாதத்துக்கு ஒரு முறை இரகசியமாக வந்து அவர்களைப் பார்த்து விட்டுப் போகும் குகனும் கபிலனும்...

வருடங்கள் ஒன்றையொன்று துரத்துகின்றன

மகள் துளசிக்கு நெருப்புக் காய்ச்சல்.

அண்ணா அண்ணா எனப் பிதற்றும் அவளின் அழுகை காற்றோடு கலந்து. அவர்களை அடைந்ததோ... இருவரும் இரகசியமாக ஓரிரவு அவளைப் பார்க்க ஓடி வந்தார்கள்

இரவும் நீண்டது.

ஒன்றாகச் சந்தித்தவர்களின் பேச்சும் நீண்டது.

பேச்சுக்கள்... முடிவில் வாக்குவாதங்களாகி உன்ட கட்சி என்ட கட்சி என்ற பிடிபாடுகள் முற்றினதில் கபிலன் பொறுமையை இழந்து விட்டான்.

அவன் மண்டையில் அடித்த அடியில் 'பெரியப்பா' எனக் கதறிக் கொண்டு அவர் காலடியில் உயிர் இழந்த குகன்...

'ராசா என்ன காரியம் செய்தனீ. அவன் உன்ட தம்பி என்டதை மறந்திட்டியே.'

'குகன், குகன்! டேய் தெரியாமல் செய்திட்டனடா. எழும்பிப் பாரடா. என்னைப் பாரடா. ஏனடா எனக்கு கோபம் வாற மாதிரிக் கதைச்சனீ. எழும்படா குகன்.'

இரத்தம் பீரிட துவண்டு விழும் குகனின் முகத்தை மாறி மாறிக் கொஞ்சினான் கபிலன்.

'' அப்பா... தெரியாமல் செய்திட்டன் அப்பா. தெரியாமல் செய்திட்டன் அப்பா... என்னுடைய கட்சி வெறி என்னைச் சிந்திக்க விடல்லை! ''

மாஸ்டர்... கபிலனை எட்டி உதைத்தார்.

'' எனக்கு நீ மகனில்லை. போ... வெளியாலை''

'' குகன்... குகன் ''

''அண்ணா... அண்ணா...''

'' அம்மா... துளசி சத்தம் போடாதையுங்கோ. இந்த விஷயம் வெளியிலே தெரிஞ்சால் பிறகு வில்லங்கம் தான். நான் போய் இதற்கு ஒரு முடிவு செய்து கொண்டு வரும் வரை... அவனை எங்கடை ஸ்டோர் ரூமுக்குள்ள ஒளிச்சு வையுங்கோ... ''

'' மாட்டன்... என்ட தம்பிக்கு துரோகம் செய்ய மாட்டன். இங்கை நடந்ததைச் சொல்லத் தான் போறன்... ''

'' அப்பா ஆத்திரப் படாதேங்கோ... இது துரோகம் இல்லை. பாதுகாப்பு. இங்கு நடந்தது வெளியில தெரிஞ்சால் நாளைக்கு நீங்கள் ஒருவரும் உயிருடன் இருந்த பாடில்லை...''

சொன்னபடியே... கபிலன்.. பொழுது விடிவதுக்கு முன் இரண்டு பேருடன் வந்து... பிணத்தை அப்புறப்படுத்தி விட்டான்.

'' சங்கிலியன் தோப்பில ஒருஆளின்ட உடம்பு கிடக்காம்''

'' மாஸ்டர்... சாடையிலே உங்கடை குகன் மாதிரியும் கிடக்கு... ''

'' என்டைக்கு அவன்கள் கட்சி... கிட்சி என்று வெளிக்கிட்டான்களோ... அண்டைக்கே அவனுகள் என்ட மகனவை இல்லை என்று மனதில் கல்லுப் போட்டுட்டன் ''

நெஞ்சம் பாறையாகக் கனக்க அந்த இடத்தை விட்டு அகல்கிறார்.

'என்னை மன்னித்து விடு சின்னத்துரை. செத்துப் போன குகனை விட என்னுடைய குடும்பம் இப்ப எனக்கு முக்கியம்'

''தன்ட மகன் எண்டால் இப்படி இருப்பாரே, எண்டாலும் தம்பியின் மகன் தானே?''

''ம்...அநாதையாக இருந்தவன்... அநாதையாகச் செத்துப் போனான் !''

ஊராரின் ஒரு கிழமைக் கிசுகிசுக்கள்...ஆமிக்காரருக்கு அவர் வீட்டில் இரண்டு இளசுகள்- 'போராளிகள்' என்பதை வெட்ட வெளிச்சமாக்கின.

தட தடவென்று நேற்று இரவு அவரை வந்து அழைத்து வந்தவர்கள் இன்றுவரை அடித்து நொறுக்குகிறார்கள்.

எப்படியாவது கபிலன் இருக்கும் இடம் அவர்களுக்கு தெரிய வேண்டும்.

அவருக்கே... தெரியாத ரகசியம் அல்லவா அது !

'எழும்படா... போ... வீட்டுக்கு. ஒன்னை பிறகு மீட் பண்றேன்'

பிடரியில் அடித்து ஸ்டேஷனை விட்டுத்தள்ளுகிறான் ஆமிக்காரன்.

அடித்தடித்து அலுத்து விட்டதோ. இல்லை பிரயோசனம் இல்லை என்று நினைத்து விட்டார்களோ...

சிரமப்பட்டு எழுந்து...தள்ளாடித் தள்ளாடி நடக்க ஆரம்

அவுஸ்ரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில் வாழும் அருண் விஜயராணி, நிறையச் சிறுகதைகள் எழுதியுள்ளார். தமிழீழத்தின் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர், தர்மங்கள் மறக்கப்பட்ட நிலையில், எழும்பும் நியாயங்கள் பற்றிய ஒரு தரிசனத்தினை இங்கு தருகின்றார்.

-ஆர்

பிக்கின்றார் மாஸ்டர்.

பொழுது சாயும் நேரம்.

உயிர் போகும் மரண வேதனையோடு வீட்டை நெருங்குமுன், இராசம்மாவின் ஓலம் காதை அடைக்கின்றது.

''ஐயோ ராசா... இப்படிச் செய்து போட்டியே! நான் என்ன பாவமடா செய்தனான்?''

''அண்ணா... கபிலன் அண்ணா, கண்ணைத் திறந்து பாருங்கோ, கண்ணைத் திறந்து பாருங்கோ.''

''மாஸ்டர் ...இரண்டு பெடியன்கள் வந்து கபிலனின்ட உடம்பைத்தந்திட்டுப் போனவையாம்.

'' கபிலன்...தற்கொலை செய்திட்டானாம்...''

''அவன்...தற்கொலை என எழுதின காயிதம் ஒண்டையும் இராசம்மாவிட்டை குடுத்தவையாம்''

வழி, வழியே ஊர் மக்கள் புதினம் அறிவிக்கிறார்கள்.

''ஐயோ... பாருங்கோ... என்ட இராசாவைப் பாருங்கோ, எனக்கு ஏன் இந்தக் கிடைப்பு? ஐயோ... டொக்டராகி... உனக்கு வைத்தியம் பார்ப்பன் எண்டவன்...இப்படி என்னை ஏமாத்திப் போட்டுப் போட்டானே...''

குழந்தைத் தனம் மாறாத வண்ணம் படுத்திருக்கும் கபிலனைப் பார்க்கும் பொழுது மனம் எல்லாம் வலித்தது.

அவரது இரத்தத்தின் ஒரு பகுதி,

'இவனையா... அன்று நீ என்னுடைய மகன் இல்லையென்றேன்! முடியுமா என்னால்?''

கண்ணீர் பெருக்கெடுத்து ஓட...அவனது தலைமாட்டில் உறைந்து போய் உட்கார்ந்து விட்டார் மாஸ்டர்.

ஒரு கிழமைக்கு முன்னால்.. குகன் மறைந்த அதிர்ச்சியே... அவர் மனதை விட்டு மறைய முன்பு...இப்படி இன்னொரு அதிர்ச்சியா? இராம லக்ஷ்மணன் போல் ஒன்றாகத் திரிந்தவர்கள் ஒன்றாகவே போய் விட்டார்களா?

எல்லாக் கடமைகளும் ஒவ்வொன்றாக முடிந்து விட்டன.

வீடு சுடுகாட்டை விட அமைதியாக இருந்தது.

செத்த வீட்டிற்குப் பிறகு அயலவர்கள்கூட வீட்டை எட்டிப் பார்க்கப் பயப்பட்டார்கள்.

உறவு கொண்டாடினார்கள் என்று தெரிந்ததும் தம் வீட்டையும் ஆமிக்காரர் வளைத்து விடுவார்களோ என்ற பயம்.

எண்ணி, இரண்டாம் நாள் தபால்காரர் கடிதம் ஒன்றை எறியாத குறையாக, அவர் கையில் தந்து விட்டு 'விர்' எனப் பறந்தான்.

அவனுக்குக் கூடவா அவரிடத்தில் பேசப் பயம்?

உள்ளே சென்று கடிதத்தை பிரித்தார்:

அன்புள்ள அப்பா,

இந்தக் கடிதத்தை நீங்கள் வாசிக்கும் பொழுது எனது ஈமக்கிரியைகள் எல்லாம் முடிவடைந்திருக்கும்.

விம்மி

ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்

* பாஸ்போட்
* விஸா
* டிக்கட்

மற்றும் பிரயாண ஒழுங்குகள்

துரித கெதியில்

சிறந்த முறையில்

செய்து தரப்படும்.

விம்மி ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்

2, சாமி தெரு, எழும்பூர், சென்னை - 600 008

போன்: 8253298 & 8252768.

குகனின் அதிர்ச்சி ஆற முன்பு நான் பெரிய பேரிடியைத் தந்து விட்டேன் இல்லையா? நினைத்தால் எனக்குக் கூடக் கஷ்டமாகத் தான் இருக்கு. சின்ன வயதில் எத்தனை கனவுகள்?

டொக்டராக நான் -

என்னிடம் மருந்துத் துண்டை வாங்கிக் கொண்டு மலர்ச்சியாக நகரும் நோயாளிக் கூட்டங்கள்-

கனவுகள் கலையவில்லை: கலைக்கப்பட்டது அப்பா!

கலைந்து விட்ட கனவுகளை எண்ணிக் கவலைப் பட்டாலும்.. மனதை தேற்றிக் கொண்டோம்.

நம் நாட்டுக்கு நல்லது செய்யப் புறப்பட்டுள்ளோம். அதன் முன்னால் என்ன வந்தாலும் துச்சமே.

ஒவ்வொரு இரவும்... சின்னப் பிள்ளைகளாக நாம் இருந்த பொழுது... நீங்கள் சொன்ன வீரக் கதைகள்... இந்திய சுதந்திரப்போராட்டம்,... சிந்தனையில் எழுந்து இரத்தத்தைச் சூடாக்கியது.

ஆனால்... நாளாக... நாளாக...

நம் கண்களில் ஏன் இந்தக் கண்ணீர்? மனதில் ஏன் இத்தனை சோகம்...

புரிகிறது அப்பா...

நினைத்த பாதையை விட்டுக் கால்கள் தடம் புரண்டு விட்டன.

நாடு என்றது போய்... போராளிகள் மனதில் நான்... நான்... என்ற மமதைகள்.

சகோதரங்களே... ஒருவருடன் ஒருவர் அடிபட்டுக் கொண்டு ..

எம்மை ஆள நினைப்பவனுக்கும் எமக்கும் இப்போ அவ்வளவு வித்தியாசம் இல்லை அப்பா...

போராளிகள்... ஒருத்தரை ஒருத்தர் கொல்லும் அளவுக்கு துணிந்து விட்டார்கள்.

ஏன் என்று கேட்க முடியவில்லை, துணிவில்லை.

மனச்சாட்சி... எப்பவோ செத்துப் போய் விட்டது!

கைகள் கட்டளைக்குப் பணிகின்றன.

நாம் இயந்திரமாகி விட்டோம்.

ஆனால்... ஆனால்... மற்ற எவரையுமே கொல்லும் பொழுது இல்லாத சோகமும்... விரக்தியும் என் கையினாலேயே என் தம்பி குகனைக் கொன்ற போது...

என்னால் தாங்கமுடியவில்லையப்பா! அவனை என்னால் மறக்க முடியவில்லை.

தன் விரலே தன் கண்ணை குத்துமா?

குகனின் உயிர் போன போது என் மனம் என்ன பாடு பட்டது? அதே துயரத்தைத்தானே நான் கொன்று குவித்த மற்ற சகோதரங்களின் உடன் பிறப்புக்களும் பட்டிருக்கும்,

மனச்சாட்சியை இன்னமும் பிணமாக வைத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

எனவே என்னையே பிணமாக்கிக் கொண்டேன்.

நம் ஒற்றுமையின்மையால் இன்னும் எத்தனையோ... வீடுகள் இப்படியே களை இழக்கத்தான் போகின்றன.

இந்தக் கடிதத்தைக் கொண்டு நியாயம் கேட்கப் புறப்பட்டு விடாதீர்கள்.

இது நியாயம் கேட்க எழுதப் பட்டதல்ல. என்னை உங்கள் முன் நியாயப்படுத்த எழுதப் பட்டது.

என்னைப் போல் எத்தனையோ இளைஞர்கள் இப்படித்தான்... மகத்தான விஷயங்களை சாதிக்கப் போகின்றோம் என்ற அடி நாள் நம்பிக்கைகள் ஏன் நொருங்கத் துவங்கின என்பதும் புரியவில்லை... போர் வெறியிலே யாரை எதிர்த்து எதற்காகச் சண்டை போடுகின்றோம் என்கிற உண்மைகூட மறக்கப்பட்ட ஒன்றாகி விட்டது... சொந்தச் சகோதரனைக் கொல்வதும், அவர்களைக் காட்டிக் கொடுப்பதுங்கூட போராட்ட நெறிகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. உங்கள் மகன் ஒரு மனிதன். அவனுடைய உள்ளத்திலே மனித நேயம் செத்துப் போவதற்கு முன்னர், அவன் செத்துப் போவதே நியாயம்... இப்பொழுது நியாயங்கள் பற்றித்தான் பேசலாம். தர்மங்களை எல்லோரும் மறந்து விட்டார்கள்.

அன்பு மகன்

கபிலன்

மாஸ்டரின் கண்ணீர்த் துளிகள் கபிலனின் எழுத்துக்களை உருத் தெரியாமல் அழித்துக் கொண்டிருந்தன.

ராமன் எத்தனை ராமனடி !

ராமன் பல தார ஸ்திரீ லோலன்.

அநுமார் பிரமச்சாரியல்ல அத்துடன், இராவணனுக்கு மகன் முறையாவான்.

இராவணனின் தங்கையான சந்திரநகி என்பவளின் மகளை அநுமார் கல்யாணம் செய்தாராம்.

பரதன் மகா பொறாமைக்காரன்.

இராவணனைக் கொன்றது இலட்சுமணன்.

இவையெல்லாம் 'அக்கினிக் குஞ்சு' வின் கண்டு பிடிப்புகளல்ல.

-கன்னட மொழியில் பம்பா கவி எழுதியுள்ள ராமாயணத்தில் இவ்விபரங்கள் காணப்படுகின்றன !

-இளம்பிறை

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

(வேறு)

பழுதழி மனதின் பண்பெலாம் பரந்து
பசுந்தளிர்ப் பயிர்தலை நிமிர்ந்து
குழைவுட னணைந்து குடலைகள் முதிர்ந்து
குளிர்பனித் தென்றலில் விளைந்து
தொழுமணிக் கதிர்கள் தொன்மைநன் மரபில்
தொழில்வளத் தூய்மையில் நிறைந்து
உழவனின் உயர்வை உள்நறும் பண்பை
உலகெலாம் உணர்கிற திருநாள்!

நெற்றியில் திலகம் நெறிமுறை வழுவா
நிலமெலாம் மரபுசொல் கோலம்
பொற்கரக் கமலம் புனைவினைப் பொலிவில்
பூவையின் இதழிலுங் கோலம்!
நற்பயன் இழந்து நயம்பெறப் பொங்கும்
நாயகன் நெஞ்செழிற் கோலம்
கற்றையால் இருளின் கலையறுத் துயிர்க்குங்
கதிரவன் சுந்தரக் கோலம்!

வரம்பெறு முலகில் வழிபிறந் ததுபோல்
விழிதிறந் திடுமொளிச் செல்வம்!
அரும்புகள் விரைந்து அழகுடல் மலர்ந்து
அவனியில் அலைபுரள் செல்வம்!
கரும்பொடு கனிகள் களனியில் புதுநெல்
கருத்திலே களங்கமில் செல்வம்
சொரிந்திடு திருநாள்! சோதியின் சுருதிச்
சோபையின் உலகெலாஞ் செல்வம்!

விடிந்தது பொழுது விளைந்தது இன்பம்
வீடெல்லாம் பொங்கலோ பொங்கல்!
முடிந்தது மிடிமை முதிர்ந்தது உடைமை
முகமெலாம் மசிழ்ச்சியின் பொங்கல்!
நடந்தது நழுவி நலம்பல தழுவி
நாடெலாம் நறுமணம் பரவிப்
படர்ந்தது பசுமை! பகவனின் மகிமை
பாரெலாம் பொங்கலோ பொங்கல்!

(வேறு)

இரண்டு உலகம் | கவிஞர் அம்பி | பப்புவா நியூகினி

தைப் பொங்கல் என்றால்
தமிழன் பொருளென்ன
இப் பொங்கற் பாடல்,
இதயத்தை ஆட்டியது

உலக மிரண்டிலெந்தன்
உளமூசல் ஆடியது
ஊசலிட்ட உள்ளத்தில்
உண்மையலை ஓடியது

நிலைமை உணராமல்
நெஞ்சழுத்தங் கொள்ளாதே
நெஞ்சழுத்தும் வேளையிலே
நிலையில் தளராதே

உலகியலைத் தேராமல்
உள்ளந் தளராதே
உள்ளந் தளர்ந்திந்த
உலகியலை நோக்காதே-

சீரடிகள் யாம் மறந்தோம்
சிறப்புலக மந்திரத்தால்
ஏர்பிடிக்க நாம் மறந்தோம்
எந்திரத்தின் தந்திரத்தால்

போரடியை நாம் மறந்தோம்
புதுவுலக நியமமென்று
யாரடியை நாம் மறந்தோம்
அதுவுலக நியமமென்று

காலஞ் சுழல்கிறது
காட்சி மலர்கிறது
ஞாலம் பல கோலம்
நாளும் பெறுகிறது

இந்நினைவில்
நா[illegible]ருக்க

எயார் நியூ கினி எயார் பஸ்
இறங்க முனைகிறது
எயார் பஸ்ஸின் யன்னலிடை
எனகண் விரைகிறது

மாடி மனை ஓங்கியதால்
மண் மரங்கள் தோன்றவில்லை
கோடிமக்கள் கண்களிலே
கொசுவினம்போல் பட்டுநின்றார்

ஓடுகின்றார் ஓடுகின்றார்
ஓய்வுறக்கம் ஏதுமின்றி
தேடுகின்றார் தேடுகின்றார்
தேடுவது யாதாமோ

நிலமகளை வசப்படுத்தி
நிதமுழைக்க விழுந்த துளி
கல கலவென் றெமதகத்திற்
கதிர்குலுங்க வெழுந்த வொலி

பொலி பொலியென் றெழுந்த
வொலி
பொங்கிய பால் வழிந்த வழி
இலயிவை என் றாகியதால்
இரண்டுலகில் நானிருந்தேன்

எட்டித்தழுவி யெந்தன்
எழிலியெனை முத்தமிட்டாள்
கட்டித் தழுவுகையில்
கண்ணீரில் நான் நனைந்தேன்

பெற்று வளர்த்த கதை
பெருமூச்சாய் வருகிறது
பற்றிப் படர்ந்த கதை
பலவாய்த் தெரிகிறது

பாட்டி நினைவு வந்து
பைந்தமிழர் சால்புணர்ந்து
ஊட்டி வளர்த்தவளை
உள்ளத்தில் ஏற்றிவந்து

உலக மிரண்டிலெந்தன்
உளமூசல் ஆடியது
ஊசலிட்ட உள்ளத்தில்
உண்மையலை ஓடியது

-வளரும்

ஈழத் தமிழரின் அரசியல்: ஒரு சாட்சியம்

-அபிமன்யு

தனது நிர்வாக இயந்திரத்தைச் சுமூகமாக நடத்துவதற்கு ஈழத் தமிழர்கள் கீழ்ப்படிவுள்ள அரசாங்க ஊழியர்களாகவும், இடைத் தரகர்களாகவும் பயன்பட்டார்கள் என்பதையும் புரிந்து கொண்ட ஆங்கில அரசு, காலத்திற்குக் காலம் தமிழர்களுக்கு எலும்புத்துண்டுகளை வீசியெறிந்து அவர்களுடைய விசுவாசத்தினைத் தக்க வைத்துக் கொள்ளுவதில் அக்கறை காட்டிற்று.

ஈழத் தமிழரின் விசுவாசத்தினை வளப்படுத்துவதற்கு ஆங்கிலேய துரைத்தனத்தால் வீசியெறியப்பட்ட மிகப் பெரும் எலும்புத் துண்டினைக் கவ்விக் கொள்ளும்பொசிப்பு சேர்முத்துக்குமாரசாமிக்கு வாய்த்தது. இதனால் அவர் சட்ட நிரூபணச்சபையின் உறுப்பினராக உயர்ந்தார். அவர் ஆங்கிலேயத் துரைகளுடன் ஆங்லேயர்போலப் பழகக்கூடிய திறமைசாலியாகவும் விளங்கினார். அவர் இங்கிலாந்து சென்று, அரச குடும்பத்திற்கு முன்னால் 'அரிச்சந்திரன்' நாடகம் நடித்துக் காட்டியும் (பின்னால் வந்த மயான காண்ட வைரமுத்து கெட்டான் போங்கள்) தமது விசுவாசத்தினை உம்பாரமாகத் தெரிவித்தார் என்றும் சொல்லப்படுகின்றது.

அவருடைய சாதனைகளுக்குக் 'கிரீடம்' வைத்தது போல, அவர் ஆங்கில மாது ஒருத்தியை வதுவை செய்து திரும்பினார் என்று மெச்சுவாரும் உளர். எஃது எவ்வாறு இருந்த போதிலும், ஈழத் தமிழர்களுடைய முதலாவது அரசியல் தலைமைத்துவம் ஈழத் தமிழ் மக்களுடைய எழுச்சியினாலும் ஆதரவினாலும் உருவாகியது அல்ல; ஆங்கில ஆட்சியாளருடைய வசதிக்காக உருவாக்கப்பட்டது. இந்தப் பாரிய உண்மை இன்றளவும் ஈழத் தமிழருடைய அரசியல் வரலாறு எழுதுபவர்களுடைய கவனத்திலிருந்து வழுகிப் போனமை கண்டு அவன் பிற்காலத்திலே வருந்தியதுண்டு.

சேர் முத்துக்குமாரசாமிக்குத் தமது தலைமைத்துவத்தை வாரிசு முறையிலே நிலைநாட்டுவதிலே ஒரு சிக்கல் ஏற்பட்டது. அவருக்கு நீண்ட ஆயுள் வாய்க்கவில்லை. அவர் இறந்ததும் அவருடைய மனைவி, அவர்களுடைய மகனுடன் இங்கிலாந்துக்குப் போய்விட்டார்.

அந்த மகனே பிற்காலத்தில் கலாயோகி ஆனந்தகுமாரசாமியாக இலங்கையிலும் அமெரிக்காவிலும் கலைச் செல்வங்களைப் பேணுவதில் அரும் பணி புரிந்தவர். சிவதாண்டவத்தின் உட்பொருள்களையும், கிழக்கின் அளப்பரிய கலைச் செல்வங்களையும் மேலைநாட்டினரும் அங்கீகரித்து மதிக்கும் ஒரு கௌரவத்தினை நிலை நாட்டுவதின் மூலம், ஈழத் தமிழர்களுக்கு அவர் பிறிதொருவழியிலே பெருமை தேடித் தந்தார் என்பது மறுப்பதற்கில்லை. ஆனாலும், சேர் முத்துக்குமாரசாமி மூலம் உருவான அரசியல் தலைமைத்துவத்தை அக் குடும்பத்துக்குள் தக்கவைத்துக் கொள்வதிலே அவருடைய மைத்துணர் பொன்னம்பலம் வெற்றி பெற்றார். இந்தப் பொன்

-சென்ற இதழ்த் தொடர்ச்சி

னம்பலத்தின் மகன்களான சேர் பொன் இராமநாதனும். சேர் பொன் அருணாசலமும் (பொன்னம்பலம் சகோதரர்கள் என்பது ஆங்கில வழக்கு) ஈழத் தமிழருடைய அரசியல் தலைமைத்துவத்தை இலகுவாகப் பெற்றார்கள். 'மருமக்கள் தாயம்' என்கிற சொத்துரிமையையும் தமிழ் மரபு ஏற்றுக் கொண்டமையினால் பிசகுகள் எதுவும் நேரவில்லை.

இலங்கைச் சுதேசிகளுக்கு அரசியல் சார்ந்த நிருவாக கலையிலே பயிற்சி அளிப்பதாகக் கூறி, மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையின்கீழ் தேர்தல் நடத்தவும் வசதி செய்யும் அரசியற் சீர்திருத்தம் ஒன்றினை ஆங்கிலேய ஆட்சி அறிமுகப்படுத்தியது. படித்த இலங்கையர் தமது பிரதிநிதி ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்கின்ற ஏற்பாடு இதனால் உருவாகியதே. ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது, சிங்களவரையும் உள்ளடக்கிய படித்த இலங்கையரின் பிரதிநிதியாகும் மகிமை, இத்தேர்தலிலே போட்டியிட்டு வெற்றி பெற்ற இராமநாதனுக்கு வாய்த்தது. அவர் இத்துடன் நின்றுவிடாது, தமது தாய்மாமன் சேர் முத்துக்குமாரசாமியைப் பின்பற்றி, ஓர் ஆங்கில மாதினை வதுவை செய்து, வாழ்க்கை முறையிலும் ஆளும் வர்க்கத்திற்குத் தாம் இரண்

டாம் பட்சமானவரல்லர் என்பதையும் நிரூபித்தார்.

மற்றைய இனங்களுடைய மத-கலாசார நம்பிக்கைகளைச் சங்கை செய்து, சகோதரத்துவ சக ஜீவனத்தை மேற்கொள்ளும் பொறுப்புணர்ச்சியும் தாராளமும் அன்றைய சிங்கள மக்களுக்கு இல்லை என்பதைக் கம்பளையில் தொடங்கி, கண்டி மாவட்டம் முழுவதும் பரவிய முதலாவது இனக்கலவரம் எண்பித்தது. சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடைபெற்ற இந்த இனக்கலவரத்தில், சிங்களவர் கடைப்பிடித்த பேரினவாத அணுகுமுறையைநியாயப்படுத்தி வாதாடுவதற்காக இராமநாதன் இங்கிலாந்து சென்றார். சிங்கள மக்களுடைய 'அகிம்ஸா' பெருமைகளைப் பிரித்தானியருக்கு எடுத்துக்கூறி, கொழும்புத் துறைமுகத்தில் வந்திறங்கிய இராமநாதனை அலங்கார வண்டியில் வைத்து, பின்னாளில் சிங்கள மக்களுடைய அரசியல் தலைவர்களாகத் திகழ்ந்த பலரும் வடக்கயிர் இழுத்து, கொழும்பு நகரின் தெருக்களிலே ஊர்வலம் வந்து தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். அந்தக் கட்டத்தில் ஈழத் தமிழர் அரசியல் தலைமைத்துவம் இலங்கை முழுவதுக்குமான அரசியல் தலைமைத்துவமாகக் கொடி கட்டிப் பறந்தது! இலங்கை முழுவதற்கும் அரசியல் ரீதியாகத் தலைமை தாங்கும் தகைமை ஈழத் தமிழரின் மேட்டுக்குடியினருக்கே உண்டு என்று பொன்னம்பலம் சகோதரர்கள் அகமகிழ்ந்தார்கள். ஆனால், அவர்கள் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள் என்பதைப் பின்னால் நிகழ்ந்தவை எண்பித்தன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் (அதுவும் இணைந்ததே இன்றளவும் ஈழத் தமிழரின் வரலாறாக அமைவதினாலும் இந்த அக்கறை) ஒரு மைல் கல்லாக டொனமூர் ஆணைக்குழு சிபாரிசு செய்த யாப்பு அமைகின்றது. பிரித்தானிய குடியேற்ற நாடுகளில், முதன் முதலாக சர்வசன வாக்குரிமையை இலங்கையருக்கு வழங்க வசதி செய்தது. ஆசிய நாடுகளிலே இத்தகைய அகண்ட அரசியல் உரிமையை அநுபவித்த முதல் மக்கள் என்ற பெருமையும் இலங்கையருக்குக் கிடைத்தது. ஆசியாவின் முதலாவது ஜனநாயக நாடு என்ற பெருமையும் இலங்கைக்கு இவ்வாறு வந்து வாய்த்தது. கல்வித் தகைமை, சொத்துடைமை போன்ற தகுதிகளைக் கவனிக்காது, இருபத்தொரு வயதினை அடைந்த, ஆண்-பெண் இருபாலரும் சுயேச்சையாகத் தங்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை சர்வசன வாக்குரிமை உறுதி செய்கின்றது. இலங்கைப் பெண்கள் பெற்ற உரிமையைப் பெறுவதற்கு பிரித்தானியப் பெண்களே மேலும் பல ஆண்டுகள் காத்திருக்க நேர்ந்தது என்பது வரலாறு. ஈழத் தமிழருடைய அரசியல் தலைத்துவம் சர்வசன வாக்குரிமையை ஆதரிக்கவில்லை. சிங்கள மக்கள் மத்தியிலே முகிழ்ந்து கொண்டிருந்த தலமைத்துவமும் நிலப்பிரபுக்கள் மத்தியில் உருவாகியது. அவர்களும் ஆதரிக்கவில்லை, இன்றைய இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவின் அரசியல் குருநாதரும், தொழிற் சங்க இயக்கத்திலே பச்சைப் பேரின வாதத்தினைக் கட்டவிழ்த்து விட்டவருமான ஏ.ஈ. குணசிங்கா சர்வசன வாக்குரிமையைப் பகிரங்கமாக ஆதரித்தார். தமது செல்வாக்கின் அடித்தளத்தினைத் தொழிலாளர் மத்தியிலே வளர்த்து பெருந்தோட்ட முதலாளிகளாக உயரும் நிலப்பிரபுக்களுக்கு எதிராக அரசியல் அதிகாரத்தைப் பங்கிடுவதற்கு சர்வசன வாக்குரிமை தமக்கு வசதி செய்யும் என்பதை

லா.ச.ரா. கருத்துக்கள் –ஒரு விளக்கம்

'கருத்துக்களை நூலிலிருந்து எடுத்துப்போட்டால், கீழே அந்த நூலின் பெயரைத்தான் போடுவது வழக்கம். கருத்தின் கீழே நீங்கள் தேதியைப் போட்டிருக்கின்றீர்கள்' என்று பலரும் குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன் 'இளம்பிறை' இதழில் எழுத்தாளராக அறிமுகமான கிழக்கு மாகாண ஓட்டமாவடியைச் சேர்ந்த எஸ்.எல். எம். ஹனீபா சமீபத்தில் சென்னை வந்திருந்தார். எழுத்தாளர் லா.ச.ராமாமிருதம் அவர்களைச் சந்தித்தார். கையில் கொண்டு சென்ற லா.ச.ரா வின் கல் சிரிக்கிறது - கங்கா - கழுகு-புற்று - தீவனி - பிராயச் சித்தம் - சிந்தா நதி ஆகிய நூல்களில், லா. ச. ரா. தன் கைப்பட கருத்துக்கள் எழுதி, தேதியையும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்துக்களை வெளியிடும் போது, அவர் எழுதிய தேதியையும் சேர்த்து வெளியிட்டோம். எனவே, இந்தக் கருத்துக்கள் வேறு எந்த நூலிலிருந்தும் எடுத்து ஆளப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

-ஆர்.

அவர் சரியாகவே கணித்தார்.

நிலக்கிழார் வர்க்கத்தின் நலன்களை முழுமையாகப் பேண விரும்பிய சிங்கள-தமிழ் அரசியல் வாதிகளுக்கு அந்தக் கட்டத்திலே சேர் பொன்னம்பலம் அருணாசலம் தலைவராகத் திகழ்ந்தார். அவருடைய தலைமையை ஏற்றிருந்த அரசியல் வாதிகள் பிரித்தானிய அரசிடமிருந்து சுதந்திரத்தை நத்தியவர்களல்லர். பரம்பரையாகக் கிராமங்களிலே ஏனையோரைச் சுரண்டி ஆண்டு அநுபவித்து வாழ்ந்த அந்தக் கூட்டத்தினர் அதிகாரத்தில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டி நின்றனர். 'சாய்புக் கடைக்காரர்களைக் கொண்ட தோர் இனம்' என்று பிரித்தானியர் வர்ணிக்கப்படுவதுண்டு. வளத்தைச் சுரண்டும் உரிமைகளைத்தம்மிடம் தக்க வைத்துக் கொண்டு, பொதுமக்களை வசக்கிப் பால் கறக்க உதவும் ஏஜண்டுகளாக 'கறுப்புப் பிரபுக்கள்' செயற்படுவதை ஆங்கிலேயரும் ஆட்சேபிக்கவில்லை. இத்தகைய ஒரு சமூக நிலையிலே டொனமூர் யாப்பு நடைமுறைக்கு வந்தது. வெளிப்படையாக என்ன காரணங்கள் சொல்லப்பட்ட போதிலும், சர்வசன வாக்குரிமையை இலங்கை மக்கள் மீது திடீரெனத் திணித்தமைக்குச் சொல்லப்படாத காரணங்களும் இருத்தல் சாத்தியமே. இலங்கையின் தேயிலை-ரப்பர் போன்ற காசுப் பயிர்களுக்கு அப்பொழுது 'ஓகோ' மார்க்கட் இருந்ததினால் ஆண்டு தோறும் செலவிலும் பார்க்க வரவு உபரியாக இருந்தது. இலங்கை கட்டுக் கடங்கிய ஜனத்தொகையுடைய சிறிய நாடு. வேலை வாய்ப்புகள் தேடி வெளிநாட்டினரும் இலங்கைக்கு வந்து கொண்டிருந்தார்கள். **Its economy was booming.** இந்தியா (இப்பொழுது இந்தியா-பாகிஸ்தான் - பங்ளாதேஷ் ஆகிய மூன்று நாடுகளை உள்ளடக்கிய நிலப்பரப்பு) பெரிய நாடு. ஒரு துணைக் கண்டம். தன்னுடைய சாம்ராஜ்யம் என்கிற முடியிலே ஜொலிக்கும் வைரமாக இந்தியா அமைந்துள்ளதாக பிரித்தானியா மதித்தது. பிரித்தானிய அரசர் 'இந்தியாவின் சக்கரவர்த்தி' என்றே சிறப்பிக்கப்பட்டார். அத்தகைய ஒரு நாட்டிலே சுதந்திர வேட்கை வீறு பெறுவதை பிரித்தானியா விரும்பவில்லை. மகாத்மா காந்தியின் தலைமையிலே சுதந்திர எழுச்சிகள் ஒன்று திரள்வதும் அவர்களுக்கு அச்சத்தை ஊட்டியது. இந்தச் சுதந்திரக் கனல் இலங்கையிலே பரவுதல் உகந்ததுமல்ல. இந்தியாமீது தன்னுடைய பிடியைத் தளரவிடாது வைத்திருப்பதற்கு இலங்கை ஒரு வரப்பிரசாதமான தளமாகப் பயன்படும் என்பது சூரியனே அஸ்தமிக்காத அகண்ட ராஜ்யத்தைக் கட்டியாண்ட பிரிட்டிஷ்காரனுக்குத் தெரியும். எனவே, இலங்கையிலே பதவி ஆசை பிடித்தவர்களாக உருவாகிக் கொண்டிருந்த அரசியல்வாதிகளுக்கு உபரியான எலும்புத் துண்டுகளை வீசி எரிவதிலே அவர்களுக்கு எவ்வித நட்டமும் இல்லை. மாறாக, ஆதாயங்கள் ஏற்படலாம் என்கிற கணிப்புக்கு இடம் இருந்தது.

குடியேற்ற நாடுகளிலே, சுதேசிகள் மத்தியிலே இனம்-மதம்-மொழி- குலம் - கோத்திரம் ஆகியன தொற்றி எழும் குரோதங்களை ஊக்குவித்து, பிரிவினை கோஷங்களுக்கு உரமிட்டு, தமது ஆட்சியை நிலைபெறச் செய்தலும் சாத்தியம் என்பதை பிரித்தானிய ஆட்சியாளர் உணர்ந்திருந்தனர். தங்களுடைய ஊக்குவித்தல் அதிகம் இன்றியே இலங்கையின் சுதேசிகள் மத்தியிலே உருவாகிவரும் பிரிவினைகள் அவர்களுக்குத் திருப்தியைத் தந்திருந்ததால், பூரண சுதந்திரம் பற்றிய பிரஸ்தாபம் இல்லாமல் இருந்தமை மகா திருப்தியைத் தந்திருக்க வேண்டும். சர்வசன வாக்குரிமையைக் கருவியாகக் கைப்பற்றி, அரசியல்வாதிகள் கட்சிகளை அமைத்து, மேலும் அரசியல் அதிகாரங்களுக்காகப் பேரம் பேசக்கூடிய ஆயுத்தினை டொனமூர் யாப்பு சாமார்த்தியமாகத் தவிர்த்தது. என்ன இருந்தாலும், அரசியலில் பிரிட்டிஷ்காரன் 'பழமும் தின்று கொட்டையும் போட்டவன்' அல்லவா? அதன் அங்கத்தவர்கள் கல்விக் குழு, விவசாயக் குழு, மராமத்துக் குழு என்ற வகையிலே பத்து இலாகாக் குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள். ஒவ்வொரு குழுவும் தங்களுக்குள் இணங்கி ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் மந்திரி என அழைக்கப்படுவார். இவ்வாறு உருவாகும் மந்திரிகளைக் கொண்டது **'Board of Ministers'** என்றழைக்கப்படும் மந்திரி சபை. கபினட் மந்திரிசபைக்கு உள்ளது போல இதற்கு கூட்டுப் பொறுப்பு இருக்கவில்லை.

நிதி-நீதி-பொது நிர்வாகம் ஆகிய முக்கிய விடயங்களிலே மந்திரி சபையினால் தலையிடவும் முடியாது. அதன் மூன்று துறைகளுக்கும் மூன்று ஆங்கிலேய சிரேஷ்ட அதிகாரிகள் 'செயலாளர்கள்' என்ற பெயரிலே ஆங்கிலேயத் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டார்கள். அதிகாரங்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சூப்பர் மினிஸ்டர்களாகச் செயற்பட்டார்கள்!

இந்த யாப்பு, வெளியாகச் சொல்லப்பட்டவற்றை விட, உள்ளார்ந்த எதிர்பார்ப்புகள் சிலவற்றையும் கொண்டிருந்தது. குழு நலன் பேணும் கோஷங்கள் எழலாம் என்பது அவற்றுள் ஒன்றாக இருக்கலாம். கண்டிச் சிங்களவர் பெருந் தோட்டப் பயிரின் செழுமைக்காகத் தங்கள் நிலங்களை இழந்திருந்தார்கள். அவர்கள் மத்தியிலே பெருந்தொகை

மூட நம்பிக்கை

நம்முடைய பழக்க வழக்கங்களுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும், விஞ்ஞான ரீதியான விளக்கந்தர வல்ல மேனாட்டவர் மத்தியிலேயே விசித்திரமான நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்றுதான் 13-ம்எண் துரதிருஷ்டமானது என்னும் நம்பிக்கையாகும். இங்கிலாந்தில் 13-ம் இலக்க வீடே இல்லையாம். 12, 12½, 14, என்னும் வகையில் 13-ம் இலக்க வீடு மறைக்கப் படுகின்றது. அணு குண்டிற்குக் கூட இல்லாத பயம், அவர்களுக்கு இந்த 13-ம் எண்ணிடம் உண்டு.

இத்தனைக்கும்13-ம் எண் எந்தவிதமான பாவமும் செய்யவில்லை. பாவத்தைச் செய்ததெல்லாம் அந்தப்படு பாவி யூதாஸ்தான். பாவிகளுக்காகச் சிலுவையில் அறைந்து கொல்லப்படுவதற்கு முதல் நாள் இரவு இயேசு நாதர் இராப் போசனம் உண்டார் அவருடன் பேதுரு, யாக்கோபு, யோவான்...யூதாஸ் உட்பட பன்னிருவர் கலந்து கொண்டனர். 13-ல் ஒருவனான யூதாஸே முப்பது வெள்ளிக் காசுக்காக இயேசு நாதரைக் காட்டிக் கொடுத்தான்.

தாழம்பூ பொய்ச்சாட்சி கூறியதற்காக பூசைக்கு எடுக்கப்படாது என்னும் நம்பிக்கை நம்மவர் மத்தியில் இருப்பதைப் போல, 13-ம் ஆளாக விருந்திற் கலந்து கொண்ட யூதாஸினால் தேவகுமாரனுக்குத் துர் வினை சம்பவித்ததால் 13-ம் எண் துரதிருஷ்டத்தின் திருவுருவமாக பயமுறுத்துகின்றது. -இளம்பிறை

யில் இந்தியத் தோட்டக் கூலிகள் குடி அமர்த்தப்பட்டார்கள். முஸ்லிம்கள்-இந்தியர்-யாழ்ப் பாணத்தவர்-கரையோரச்சிங்களவர் ஆகியவர்கள் 'கடை-கண்ணிகளை' நடத்தும் வர்த்தகர்களாகக் குடியேறினார்கள் இலங்கையின் கரையோரப் பகுதி போர்த்துக்கேயர்- ஒல்லாந்தர்- பிரித்தானியர் ஆகியோரின் குடியேற்ற நாடாக மாறிய போதிலும், கண்டிப் பகுதி, தனித்த சுதந்திர நாடாக இரண்டு நூற்றாண்டு காலம் தனித்துவ வரலாறும் கலாசாரப் போக்குகளும் கொண்டதாகத் திகழ்ந்தது. 1815-ம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட பல முனைப்பட்ட இந்தத் தாக்குதல்களை அவர்களாலே ஜீரணிக்க முடிய வில்லை. அவர்களுடைய பிரச்சினை தனித்துவமானவை. தங்களுடைய பிரச்சினைகளை முதன்மைப் படுத்துவதற்குக் கண்டிச் சிங்களவர் தனித்த ஓர் அரசியற் குழுவாக இயங்க வேண்டிய நியதி இருந்தது.

கரையோரச் சிங்களவர் மத்தியிலே, பதினாறாம் நூற்றாண்டிலேயே, கிறிஸ்தவ மிஷனரிமாரின் 'தொண்டு'கள் துவங்கி விட்டன. அக்காலத்திலே துவிபாஷிகள் தோன்றினார்கள். இந்தத் தடத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அவர்கள் மத்தியிலே ஆங்கிலமொழி அறிந்த படித்தவர்கள் தோன்றினார்கள். நிலப்பிரபுக்களாக விளங்கிய 'கொவிகம' என்னும் வேளாளச் சிங்களவர் முதன்மை பெற்றவர்களாக உயர்ந்தார்கள். மாத்தறையை மையமாகக் கொண்ட 'தூய சிங்கள மொழி'க் 'கொவிகம' சிங்களவர்களுக்கும், ஆங்கில நடை-உடை-பாவனைகளைப் பின்பற்றிய ஏனைய 'கொவிகம' சிங்களவர்களுக்குமிடையில் முரண்பாடு இருந்தது. 'கடல் அறுவடையை' நம்பி வாழும் 'கரவா' சிங்களவர்கள் ஒரு தனிக் குழுவாக உருவானார்கள். சேர நாட்டிலிருந்து கறுவாப்பட்டைகள் உரிப்பவர்களாகக் குடியேறிக் 'கத்தியும் கையுமாக' வளர்ந்த 'சலாகம' சிங்களவர்கள் தனித்த குழுவாகச் செயற்பட்டது. இந்தப் பல்வேறு சிங்களக் குழுக்களுடைய 'பேச்சாளர்'கள் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் குடியேறிச் செயற்பட்டார்கள்.

கொழும்பு-புறக்கோட்டையை அண்டிய பகுதிகளிலே முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்தார்கள். அதிலே வர்த்தகத் தனவந்தர்கள் அவர்களுடைய தலைவர்களாகத் தோன்றினார்கள். அவர்கள் மத்தியிலிருந்து நியமிக்கப்படும் தலைவர் ஜும்மாத் தொழுகைகளின் பின்னர் இலங்கை முழுவதற்குமான தலைவராக அங்கீகரிக்கப்படும் எளிமை நிறைந்ததாக முஸ்லிம்களுடைய அரசியல் அன்று தோற்றமளித்தது.

நிலப்பரப்பின் அடிப்படையில் உருவாக்கப்படும் தேர்தல் தொகுதிகளிலிருந்து, சர்வசன வாக்குரிமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட சட்ட சபை **(state council)** உருவாக்கப்படும் என்கிற ஏற்பாட்டினை ஈழத் தமிழரின் தலைமைத்துவத்தினால் உடனடியாக ஜீரணிக்க முடிய வில்லை. இதிலே இன்னொரு சிக்கலையும் அது அவதானித்தது. மேல் மாகாணமும் அங்கு அமைந்த கொழும்பும் அரசியலிலே முதன்மை பெறும் என்பதைக் கணித்த சேர் பொ. அருணாசலம், 'மஞ்சல் துணிக்காகத் தாயைக்கொன்ற மோட்டு சிங்களவன்'களுக்கும் தலைமை தாங்குவதற்கு மேல் மாகாணத்திலும் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைக்க வழிவகுக்கப்படல் வேண்டும் என்பதிலே கண்ணாக இருந்தார். சிங்கள மக்களுக்கும் தலைமை தாங்கும் அப்போதைய யதார்த்தம் மட்டுமல்லாமல், ஜனத்தொகை பற்றிய புள்ளி விபரங்க

ளும் அவருக்குத் துணை நின்றன (அவருடைய, மேல்மகாணத்திலே தமிழருக்கு ஒரு பிரதிநிதித்துவம் வேண்டும் என்கிற கனவு ஹட்டனுக்கு அயலிலிருந்ததோட்டக்காட்டிலே பிறந்து, டீக்கடைச் சிற்றூழியனாக வாழ்க்கையைத் துவங்கிய செல்லச்சாமி மூலம் சுமார் அறுபது ஆண்டுகள் கழித்து நிறைவேறுதல் வேண்டும் என்பது வரலாற்றின் விந்தையாக அமைந்தது நேற்றைய நிகழ்வாகும்).

அருணாசலத்தின் நிலைப்பாடு விளங்கத் தக்க ஒன்றே. அவர் மேட்டுக் குடியினர். 'இருமரபும் துய்ய வந்த கார் காத்த வேளாளரின் ஆதிக்கம்சமன் ஈழத் தமிழர் முன்னேற்றம்' என்பதை இயல்பாக ஏற்றுக் கொண்டவர். யாழ்ப்பாணத்து ஏழை- பாழைகளும் பஞ்சமரும் குடிமைகள்; அடிமைகள். எனவே, அரசியல் பூஜ்யங்கள். ஆங்கிலேயரின் நிர்வாக இயந்திரத்தின்சிறுசக்கரங்களாகவும், வழுக்காகவும் படித்த, அரசசேவையில் அமர்ந்து கொண்ட, ஈழத் தமிழர் பயன் பட்டார்கள்.

-வளரும்

ஜேர்மனியில் தமிழ்க் கலாசார விழா!

தமிழ் மக்களின் கலை கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் மாபெரும் கலை விழாவும், அதையொட்டி ஒரு பொருட்காட்சியும் ஜேர்மனியில் நடைபெறவுள்ளன.

சமீபத்தில் சென்னை வந்திருந்த திரு. வை. சத்தியகுமாரன், இதனைத் தெரிவித்தார்.

திரு.சத்தியகுமாரன் இலங்கையைச் சேர்ந்தவர். பல்லாண்டு காலமாக குடும்பத்துடன் ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றார். அவர் மனைவி அங்கு மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றி வருகின்றார். மனைவியின் துணையுடன், பாரதியார்பாடல்கள் சிலவற்றை ஜேர்மன் மொழியில் பெயர்த்துள்ளார்!

சமீபத்தில் இவர் தமிழகம் வந்தபோது சென்னை பாண்டியன் ஹோட்டலில் 30-1-91 அன்று பத்திரிகையாளர் மாநாடொன்றைநடத்தினார். ஜேர்மனியில் இவ்வாண்டு மே மாதம் 6ந் திகதி தொடக்கம் 24ந் திகதி வரையும் தாம் நடத்தவிருக்கும் தமிழ்க் கலைவிழா, பொருட்காட்சி பற்றிய தகவல்களை அப்போது அவர் விவரித்தார்.

'தமிழ் மக்களின் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையை ஜேர்மனிய மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். தமிழர்கள் அணியும் ஆடை ஆபரணங்களிலும் அவர்களுக்கு மோகம் உண்டு. ஆயினும், நமது பாரம்பரிய கலைகள் பற்றியும், ஆன்மீக சிந்தனை பற்றியும், அவர்கள் அதிகம் அறிந்திருக்கவில்லை. அதற்கான முயற்சிகளை பெருமளவில் நாமும் மேற்கொள்ளவில்லை. ஜேர்மனியில் தற்போது நாம் மேற்கொண்டுள்ள இந்தக் கன்னி முயற்சி, பெருமளவு பயன் தரும் என்ற நம்பிக்கையில் இதனை ஆரம்பித்துள்ளோம்.

நாதஸ்வரம், வீணை, பரத நாட்டியம், சிற்பம், ஓவியங்கள் முதலிய கவின் கலைகளைப் பறை சாற்றும், ஒரு கலை விழாவையும், பொருட் காட்சி ஒன்றையும் நடத்த முன் வந்துள்ளோம். பொருட்காட்சியில் பனம் பொருட்கள், பண்டைய ஓலைச் சுவடிகள், நெல்மணிகள், சங்கு, சிப்பிகளால் செய்யப்படும் நுண்கலைப் பொருட்களும் இடம் பெறும். மற்றும் நமது நாகரிகம், தொன்மை, பண்பாடு, ஆன்மீகம், வைத்தியம் முதலியவற்றை வெளிப்படுத்தும் நூல்களும் இடம் பெறும்.

தமிழ் நாட்டிலுள்ள இசைக் கலைஞர்களையும், பரத நாட்டிய மேதைகளையும் ஜேர்மனிக்கு அழைத்துச்சென்று இக் கலைவிழாவைச்சிறப்பிக்கவும், நமது கலைகளின் பெருமைகளை மேலை நாட்டார் தெரிந்து கொள்ளவும் இந்த முயற்சி மேற்கொள்ளப் படுகின்றது.

தமிழ் நாட்டுக் கலைஞர்களின் ஒத்துழைப்பையும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களின் ஆதரவையும் இதற்காக யாசித்து நிற்கின்றோம்.

இந்த விழாவை சிறப்புற நடத்துவதற்கு ஜேர்மன் அரசும் பூரண ஒத்துழைப்பை எமக்குத் தர இசைந்துள்ளது. கலை விழாவையும், பொருட் காட்சியையும் நடத்துவதற்கு ஜேர்மனியில் பிரமாண்டமான கலை அரங்கொன்றைத் தருவதற்கு அந்த நாட்டு அரசு முன் வந்துள்ளது. மற்றும், கலை விழாவில் பங்கேற்கும் நம் நாட்டுக் கலைஞர்களுக்கான உணவு, தங்குமிட வசதிகளை அளிக்கவும் அது முன் வந்துள்ளது. மேலை நாட்டு அறிஞர்கள் பலரும் விழாவில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

கலை விழாவை யொட்டி, கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவும் முன்வந்துள்ளோம். உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்காக இந்தப் போட்டி ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. முதல் பரிசாக, ரூபா 3,000 பெறுமதியான தங்கப் பதக்கமும், இரண்டாம் பரிசாக ரூபா 2,000 பெறுமதியான தங்கப் பதக்கமும் வழங்கப்படும்.

தமிழ் கூறு நல்லுலகம் எங்கள் முயற்சிக்குப் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும், தரவேண்டுமென்று வேண்டி நிற்கின்றோம்.

இவ் விழா சம்பந்தமாக தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
V. SATHIAKUMARAN, POSTFACH : 100622-5090, LEVERKUSEN-1, WEST GERMANY, TEL : 0214-48025

ஈழத் தமிழர் அகதி முகாம்:

கும்மிடிப் பூண்டி

- ஒரு விசிட்

சென்னை சென்ட்ரலில் இருந்து 11-45க்குப் புறப்பட்ட மின்சார ரெயில், ஒரு மணித் தியாலம் பயணித்து 12-45க்கு கும்மிடிப் பூண்டியில் எங்களை இறக்கியது.

செங்கை அண்ணா மாவட்ட வட பகுதியில், சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில், கும்மிடிப்பூண்டி ஈழத் தமிழர் அகதி முகாம் அமைந்துள்ளது.

ரெயில் நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் ரெயில் பாதை வழியாக நடந்து முகாமை அடைந்தோம். வெள்ளை வெளேர் கூடாரங்களில், அந்த 'அகதிக் கிராமம்' எங்களை வரவேற்றது.

நாங்கள் சென்ற அன்று, விளையாட்டுப் போட்டியும், கலை விழாவும் ஏற்பாடாகியிருந்தன. அகதிகளுக்கான பாடசாலை மைதானத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அப் பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், அகதிகளின் ஒத்துழைப்போடு இந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

காலையில் விளையாட்டுப் போட்டிகள் நடந்து, பின்னேரம் கலை விழா ஆரம்பமானது. அதிபர், ஆசிரியர்கள், வழி நடத்தலில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பாட்டுகள், நடனங்கள், நாடகங்கள் வெகு உற்சாகமாக இடம் பெற்றன. சொந்த மண் துறந்து, சொத்துடமை இழந்து வந்திருந்த ஈழத் தமிழ் அகதிகள், தங்கள் துயர் மறந்து இக்கலை நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் 815 குடும்பங்களைச் சேர்ந்த 2805 அகதிகள் இருக்கின்றார்கள். அவர்களுக்கென்று ஒரு பாடசாலை இயங்குகிறது. அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆசிரியர்கள் பணி புரிகின்றார்கள். மாணவர் எண்ணிக்கை 769. பாடசாலையில் இட வசதி குறைவு. இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு, சென்னையில் இயங்கும் **ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் (ORGANISATION FOR EELAM REHABILITATION (OFERR)** எடுத்துள்ள முயற்சியின் பயனாக, இப்பாடசாலைக்கு 60X20 அடியில் ஒரு கட்டிடம் கிடைக்கவுள்ளது. இக் கழகத்தின் பொருளாளராக திரு எஸ்.சந்திரகாசன் பணி புரிகின்றார்.

அவரிடம் பேச்சுக் கொடுத்தபோது பின் வரும் தகவல்கள் கிடைத்தன.

தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் மொத்தம் 298 முகாம்கள் இயங்கி வருகின்றன, இவற்றில் 1, 20, 000 அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இம் மறுவாழ்வுக் கழகத்தில் 25 பேர் பணிபுரிகின்றனர். அத்தனை பேரும் இலங்கையர்கள்.

மருத்துவம்

1. தமிழ்நாட்டிலுள்ள சகல முகாம்களிலும் இலங்கையைச் சேர்ந்த டாக்டர்கள், மருத்துவ உதவியாளர்கள், தாதிமார், மருத்துவமாதுகள் பணிபுரிகின்றனர்.

2. ஆறு வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பாலும், கற்பவதிகளுக்கு சத்து மாவும் வழங்கப்படுகின்றது.

கல்வி

1. முகாம்களுக்கு உள்ளேயும், வெளியேயும் தங்கியுள்ள மாணவர்களின் கல்வி வசதிக்காக பஸ்களில் இலவசப் பயணச் சீட்டுகளும், சலுகைக் கட்டணப் பேரூந்து வசதிகளும், செய்யப்பட்டுள்ளன.

2. மருத்துவக் கல்விக்கு ஆண்டு தோறும்20 இடங்களும், பொறியியல் துறைக்கு 40 இடங்களும், தொழிற் நுட்பத் துறைக்கு 40 இடங்களும், விவசாய உயர்கல்விக்கு 10 இடங்களும். பட்டப்படிப்புக்கு தாராளமான இடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

3. G.C.E. O/L, A/L மாணவர்களுக்கு அவர்கள் கல்வியைத் தொடர வசதி செய்து தரப்படுகின்றது,

4. பாடசாலைப் பிள்ளைகளுக்கான பந்து முதலிய விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. தற்போதைக்கு இந்த உதவி 50 முகாம்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஏனைய முகாம்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

தொழிற்பயிற்சி

தனியார் நிறுவனங்களின் உதவியுடன், கைப்பொருள் தொழிற் பயிற்சி, தையல் போன்றவற்றிக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. மற்றும் அகதிகளுக்கு உடைகளும் வழங்கப்படுவதோடு, பிரச்சனைகளுடன் வருவோரை தக்கபடி ஆற்றுப்படுத்தலும் மேற்கொள்ளப்படுகின்றன.

அகதிகள் முகாமிலுள்ள ஒரு கூடாரத்தின் தோற்றம்

இப்பணிகளுக்கான நிதியுதவி பற்றி வினவப்பட்ட போது பின் வரும் தகவல்கள் கிடைத்தன.

ஆரம்ப காலத்தில், பிற நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களிடமிருந்து நிதியுதவி கிடைத்தது. பின்னர், அரசு சாரா நிறுவனங்கள் உதவின. அவுஸ்ரேலியா திருச்சபையும், உலக திருச்சபை நிறுவனங்களும் நிதியுதவி செய்து வருகின்றன.

கலைஞரின் ஆட்சியின்பின், அகதிகளுக்கான நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்டு வருகின்றது. மற்றும், தமிழ் நாடு அரசு நலவாழ்வுத் துறையும், மத்திய அரசு சமூக நலவாரியமும், இந்திய அரசு சாரா நிறுவனங்களும், இந்திய பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கங்களும் நிதியுதவி அளித்து வருகின்றன.

முகாமிலுள்ள அகதிகளின் பொழுது போக்குக்காக மாத, வார, தினசரிப் பத்திரிகைகளும், வானொலி, தொலைக்காட்சி என்பனவும் வழங்கப்படுகின்றன. தற்போது 100 அகதி முகாம்களுக்கே இந்த வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இது ஏனைய முகாம்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

முகாம்களை ஒரு தடவை சுற்றிப் பார்த்தோம். ராணுவ வீரர்கள் பயன்படுத்தும் கூடாரங்களில் அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். கிடுகு வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் ஒரு கூடாரத்தில் 4 குடும்பங்களும் நெருக்கியடித்து வாழ்வதைப் பார்க்க மிகவும் கஷ்டமாக இருந்தது. இது பற்றிக் குறிப்பிட்ட போது, தற்போது அகதிகளுக்கு நிரந்தர கட்டிடம் அமைக்கப்பட்டு வருவதாகவும், அது பூர்த்தியானதும் இந்தக் கஷ்டம் தீர்ந்து விடும் என்றும் கூறினார்கள். கட்டப்பட்டுவரும் நிரந்தரக் கட்டிடங்களையும் சென்று பார்த்தோம். கல், சிமெண்டால், லயன் அமைப்பில் பல நிரந்தர வீடுகள் துரிதமாகக் கட்டப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக இருந்தது.

நாம் சந்தித்த அகதிகள், தங்கள் சமையலுக்கான, அடுப்பு, விறகு பற்றாக்குறை பற்றியும் பிரஸ்தாபித்தார்கள். OFERR மூலம் இக்குறைபாடுகள் விரைவில் தீர்வதற்கான அறிகுறிகளும் தெரிந்தன. அங்குள்ள அகதிகள் பலரும் யாழ்ப்பாணம், மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள். வீடு, வாசல், உடமைகள் அனைத்தையும் இழந்து தமிழ் நாட்டில் வந்து தஞ்சம் புகுந்துள்ளார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சோகக்கதைகள் சொன்னார்கள்.

இத்தனை சோகங்களுக்கு மத்தியிலும் மனம் தளராமல் நம்பிக்கை ஒன்றினை எதிர்பார்த்து வாழ்ந்து வருகின்றார்கள். அகதிகளில் சிலர், 'வீட்டோடு' பெட்டிக் கடைகள் வைத்தும் வியாபாரம் செய்வதைக் காணக் கூடியதாக இருந்தது! அந்தக் கடைகளில் ஒன்றை அணுகி, யாழ்ப்பாணம் தாவடிப் புகையிலையை வாங்கிச் சுவைத்தபடி நடையைக் கட்டினோம்.

இப்பகுதியின் தாசில்தார் திரு. சேதுநாராயணன் மிகுந்த ஆர்வத்தோடு அகதிகளுக்கு வசதி செய்து கொடுத்துவருவதைப் பார்த்தபோது மனசுக்கு ஆறுதலாக இருந்தது.

-நவம்

OFERR முகவரி :

14, சேட் காலனி,
முதலாவது தெரு,
மூன்றாவது மாடி,
எழும்பூர், சென்னை-600 008.

திரு. எஸ். சந்திரகாசன் ஓர் அகதிக் குழந்தைக்குப் பால் வழங்கும் காட்சி

நாடகத்தில் தரமும் சர்வதேசத் தொடர்புகளும்

ஒரு நாடகத்துக்கு (அல்லது வேறு எந்தக் கலை நிகழ்ச்சிக்கும்) ரிக்கற் விற்க முற்படும் போது, முதலில் கேட்கப்படும் கேள்வி 'இது எந்த நிதிக்கு?' என்பதாகும். இந்தக் கேள்வியில் முக்கியத்துவம் வாய்ந்த பல விஷயங்கள் தொக்கு நிற்கின்றன.

நிகழ்ச்சியை ஆக்குபவரே பார்வையாளரிடம் போய் ரிக்கற் வாங்கும்படி கேட்கிறார்; பார்வையாளர் தாமாக வந்து ரிக்கற் கேட்கவில்லை என்பது முக்கியமானது. ஆகவே 'இது எந்த நிதிக்கு? 'என்ற கேள்வியைக் கேட்கும் உரிமை இவருக்கும் அதற்கு விடை கூற வேண்டிய கடமைப்பாடு அவருக்கும் ஏற்படுகின்றன. சினிமாக் கொட்டகையிலோ, கார்ணிவலிலோ போய் ரிக்கற் வாங்கும்போது, எந்த நிதிக்கு என்று எவரும் கேட்பதில்லை. அல்லது ஒரு ஆங்கில நாடகத்துக்குப் போய் ரிக்கற் வாங்கும் போதும் இதைக் கேட்பதில்லை.

அதேபோல, ஒரு டாக்டரிடம் சிகிச்சை பெறும்போதோ, அல்லது ஒரு சட்ட வல்லுநரிடம் சேவை பெறும்போதோ பணம் எந்த நிதிக்கு என்று எவரும் கேட்பதில்லை. ஆனால் மாதக் கணக்காகவும், சில வேளை வருடக் கணக்காகவும் சிரமப்பட்டு, நேரத்தையெல்லாம் செலவழித்து, தமிழ் நாடகம் அல்லது கலை நிகழ்ச்சி தயாரித்து அதை மேடையேற்ற முனைபவர்கள்தான், பணம் எந்த நிதிக்கு என்று கணக்குக் காட்ட வேண்டியவர்களாயும் உள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் ஓர் ஆங்கில நாடகத்தைப் பார்க்க ஆகக் குறைந்தது இருபது டொலராவது தேவை. சில வேளை ஐம்பது, நூறு என்றும் ஆகலாம். இதேவேளை ஒரு தமிழ் நாடகத்துக்குக் கட்டணம் ஐந்து டொலர். இதுவும்கூட ஏதோ ஒரு உதவி நிதிக்கென்றால் தான் கொடுக்கப்படும்; நாடகத்துக்கல்ல. அதேவேளை, 'தமிழ் தமிழ்' என்று கத்தித் திரிபவர்களும் நாமே.

ஆங்கிலத்தில் தொழில் ரீதியான நாடக, கலை முயற்சிகள் வளர்ந்துள்ளன. தமிழிலோ...? தமிழில் ஒரு நாடகத்தை ஐந்து டொலருக்குக்கூடச் 'சந்தைப்படுத்த' முடியாத நிலை உள்ளது. இதற்குக் காரணம் சந்தை, சந்தைப்படுத்தப்படும் பொருளின் (நாடகத்தின்) தரம், சந்தைப்படுத்தும் விதம் ஆகிய மூன்றுமே. அத்துடன், பாரம்பரியமாக நாங்கள் சினிமா தவிர்ந்த ஏனைய கலைகளுக்கு அதிகம் பணம் கொடுத்துப் பழக்கப்படாதவர்கள். தரத்தைப் பற்றி ஏதும் கவலைப்படாமல், சனசமூக நிலைய முன்றல்களிலும், கோயில் வீதிகளிலும் இலவசமாக நாடகம் பார்த்து இன்பமடைந்தவர்கள். கலைநிகழ்ச்சிகள் எமக்கு பல சந்தர்ப்பங்களில் திருவிழாக்கள் போல் இழுபடுகின்ற, நேரத்தைப் போக்கும் சாதனங்களாகவே அமைந்திருக்கின்றன.

பார்வையாளர்கள் தாமாகவே வந்து பணம் கொடுத்து ரிக்கற் வாங்கி நாடகம் பார்க்கும் நாள்தான், ஒரு நாடகம் சுய மதிப்புடன் மேடையேறும் நாள், இது எப்பொழுது வரும்? எப்படி வரும்?

தரமும், நல்ல திட்டமிடலுமே இதை சாதிக்க வல்லன. தமிழ் நாடகம் என்றதும் பார்வையாளர் மனத்தில் என்ன தோன்றுகிறது? நிச்சயமாக அது தரமும், பெறுமதியும் அல்ல (விதிவிலக்குகள் உண்டு). இதை நீக்கும் வலிமை தமிழ் நாடகத் துறையின் கைகளிலேயே இன்று உள்ளது.

இன்று இலங்கை, இந்தியாவுக்கு வெளியே - பல சர்வதேச நகரங்களிலும் - ஊக்கமான தமிழ் நாடக முயற்சிகள் நடைபெறுகின்றன. இது நல்ல விஷயம். வளர்ச்சியடைந்த நாடுகளின் வளர்ச்சியடைந்த பிற மொழி நாடக அரங்கத்துக்கு அருகருகே நடைபெறும் முயற்சிகளாக இவை இருப்பது அரிய வாய்ப்பாகும்.

பிறந்த மண்ணையும், சுவாசித்த காற்றையும், சொந்த பந்தங்களையும் விட்டு விட்டுத் தொலைதூரம் வந்து விட்ட சாதாரண தமிழர் மனங்களில் காணப்படும் வெறுமையும், வரட்சியும், ஏக்கமும் விளங்கத் தக்கதே. வாழ்க்கைக்கு அர்த்தம் தேடும் எமது தேடலுக்கு நல்ல பதிலாக அமையத் தக்கவை கலைகளும் கலாசாரமுமே.

வெளிநாடுகளே சொந்த நாடுகளாகிவிட்ட எமது இளைய தலைமுறையினருக்கும் அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் வாழ்க்கை எப்படி அமையப் போகிறதென்ற கேள்விக்கு விடை தெளிவற்றே உள்ளது. இந்த விடை இன்றைய தலைமுறையினரில் பெருமளவு தங்கியுள்ளதெனில் அது மிகையல்ல.

இந்தக் கோணங்களில் பார்க்கும்போது, உலக நகரங்களில் இன்று நடக்கும் கலை முயற்சிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. நாடுகளும், நகரங்களும்

-மாவை நித்தியானந்தன்

தொலைவிலும், பலதிசைகளிலும் சிதறியிருப்பினும் முயற்சி ஒன்றே. பிண்ணணிகளும் ஒத்தனவே. எனவே, இந்த முயற்சிகள்யாவும் இணைக்கப்படவும், ஒருமுகப் படுத்தப்படவும் சாத்தியமும், தேவையும் உண்டு. சுருங்கச் சொல்லின், சர்வதேச நகரங் களுக்கிடையில் ஒரு தொடர்பும், கூட்டுறவும், வளர மிகுந்த வாய்ப்பும், தேவையும் இன்று உள்ளன.

தமிழ் நாடகத்துக்கு எப்போதும் இருந்துவரும் பெரிய பிரச்சினை, தரமான பிரதிகளுக் கான தட்டுப்பாடு. அதுவும், வெளிநாட்டுத் தமிழர்களின் வாழ்கைப் பிண்ணணியில் நாடகப் பிரதி தேடுவோருக்கு அது கிடைப்பது முயற்கொம்பாக உள்ளது. இதைவிட, தாய் நாட்டை நோக்கிய எமது ஏக்கங் களுக்குத் தீனியாகவும், பழைய ஞாபகங்களை அசைபோடுவதற்கு வாய்ப்பாகவும் அமையத்தக்க பிரதிகளும், இளைய தலைமுறை யினரின் தேவைக்காக இதிகாசங் கள், காப்பியங்களைத் தழுவிய பிரதிகளும் தேவையாக உள்ளன. ஒரு நகரில் மேடையேறும் நல்ல நாடகப் பிரதி, ஏனைய நகரங் களுக்கும் கிடைக்க வேண்டும். பிரதி மட்டுமல்ல, தயாரிப்புக் குறிப்புகள், உத்தி - ஒளியமைப்பு விபரங்கள், **Special effects, sound effects** போன்றவை கூடப் பரிமாறப்படலாம். ஒலி நாடாக்களும், வீடியோ நாடாக் களும் இத்தகைய பரிமாற்றங் களை இலகுபடுத்தும். காலப் போக்கில், நாடகக் குழுக்களின் முழுமையான மேடையேற்றங் களைக் கூடப் பரிமாறிக் கொள் ளக்கூடிய சூழ்நிலையும் வரலாம்.

இவையெல்லாம் நாடகக் கலையை புதிய வளர்ச்சிப் படிநிலைகளுக்கு இட்டுச் செல்லு தல் கூடும். தரத்தின் வளர்ச்சி, 'சந்தைப் படுத்துதலை' இலகு வாக்கும். சந்தையையே மாற்றி யமைத்துவிடும்.

உலகளாவிய ரீதியில் நாடக சஞ்சிகை, செய்தி மடல் போன் றன வெளியிடுதலும் சாத்திய மானதே. நாடகக் கலைஞர் களுக்கும், ஆர்வலர்களுக்கும் இதனால் பெரும் பயன் விழைதல் கூடும். நாடகத் துறைத் தகவல் களைப் பரிமாறவும், அறிவை விருத்தி செய்யவும், கருத்துக் களை விவாதிக்கவும், விமர்சனங் களை வெளியிடவும் இது நல்ல களமாகலாம். ஒரே நேரத்தில்பல இடங்களிலிருந்து ஒரே பிரசுரத் தை வெளியிடுதலும் சாத்தியமே. **Photocopier, Facimile** போன்ற சாதனங்களும், இலகுபடுத்தப் பட்ட நவீன அச்சு வசதிகளும், தமிழ் கொம்பியூட்டர் அச்சுக் களும், துரித கடிதப் போக்கு வரத்து வசதிகளும் இத்தகைய பிரசுர முயற்சியை இலகுவாக்க உதவும்.

சுருங்கச் சொன்னால், சர்வ தேச ரீதியில் தமிழ் நாடகத் துறையை ஒன்றிணைக்கும் நாடக இயக்கமொன்றின் தோற்றம், காலத்தின் இன்றைய தேவை.

KUMARAN BOOK CENTRE

□

SRI LANKAN AND INDIAN MAGAZINES, NEWS PAPERS, CINE-PUBLICATIONS

□

TAMIL AUDIO CASSETTES

□

SRI LANKAN FOOD PRODUCTS

□

தீசை பத்திரிகையின் விற்பனையாளர்

□

வெளி நாட்டில் வாழும் உங்கள் உறவினர்-நண்பர்களுடன் உடனுக்குடன் FAX மூலமாக எளிதிலே தொடர்பு கொள்ள, 24 மணி நேரமும் மகிழ்ச்சியுடன் சேவை செய்யக் காத்திருக்கிறோம்.

□

KUMARAN BOOK CENTRE

1, TOWER HAMLETS ROAD, LONDON E17 4RQ

Tel 01-520-5960 Fax ; 01-521-9482

K. MAHESWARAN

சென்னை கடிதம்

இந்திய மண்ணில் ஈழத் தமிழர்

புலம் பெயர்ந்த ஈழத்தமிழரில் பெரும்பாலோர் தமிழக மண்ணில் தான் தஞ்சமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கில் இருந்த அவர்களது எண்ணிக்கை இன்று இரண்டு லட்சத்தையும் தாண்டிவிட்டது.

இவர்களில் அரசு உதவியை நம்பி ஏறத்தாழ 120 ஆயிரம் பேர் 200 க்கும் மேற்பட்ட அகதி முகாம்களில் தங்கள் வாழ்நாட்களை வீணாக்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் கடந்த ஆண்டு ஜூன் 11ம் தேதிக்குப் பிறகு வந்தவர்கள்.

இவர்களுக்கு முன்பே இங்கு வந்த எண்பது ஆயிரத்துக்கும் குறையாத ஈழத் தமிழர் தங்கள் சொந்த பந்தங்களையும் சுய முயற்சியையும் நம்பி வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

ஈழத் தமிழர் உரிமைகளுக்காக ஆயுத மேந்திய போராளிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களுமாக பல நூறு பேரை ஐந்தாறு தனி முகாம்களில் 'சிறை' வைத்து தமிழக அரசு பராமரிக்கிறது.

வேறு சில போராளிகளோ காவல் துறையின் கண்களில் படாமல் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் 'தலைமறைவு' வாழ்க்கை நடத்துகிறார்கள்.

ஒரிசாவிலும் ஒரு கூட்டம் அடிப்படை வசதிகள் கூட இன்றி இன்னமும் அவதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

சொந்த மண்ணுக்குத் திரும்ப வேண்டும் என்ற இவர்களது அங்கலாய்ப்பை தணியாத தாகத்தை தமிழீழ மண்ணில் நடக்கும் ஓயாத சண்டை தவிடு பொடியாக்கி வருகிறது.

பிரச்சினைகளையே வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டுள்ள இவர்களது துயருக்கு எப்போது, யாரால் விடிவும் முடிவும் வரும் என்பது புரியாத புதிர்!

இவர்களைத் தனது மக்கள் என இலங்கை நினைக்குமேயானால் தனது இயலாமையை எண்ணி அது வெட்கித் தலை குனிய வேண்டும்.

இவர்கள் தனது குடிகளே அல்லர் என்ற எண்ணம் இருந்தால் இவர்களது விஷயத்தில் இனி அது தலையிடக் கூடாது.

தனித்து வாழ விரும்பும் மக்களை இன்னும் எத்தனை காலம் அது கட்டிப் போட்டு வைத்திருக்க முடியும்?

உலக நாடுகளில் மாறிவரும் சமுதாய அமைப்புகளை இலங்கை அரசு காலம் கடக்கு முன்னரே; புரிந்து கொண்டால் நல்லது. இலங்கையில் அமைதி திரும்பாதவரை ஈழத் தமிழர் அகதிகளை இந்தியா திருப்பி அனுப்பாது என்று பொறுப்புள்ள இந்திய அரசு அதிகாரிகள் அதிகார பூர்வமாகவே பல முறை அறிவித்து விட்டனர்.

இலங்கையில் எப்போது அமைதி திரும்புவது? இந்த மக்கள் சொந்த மண்ணுக்கு எப்போது திரும்புவது?

கடலலைகள் ஓய்ந்து தலை முழுகும் கதையாகி விடுமோ?

இத்தகைய சிந்தனை எண்ணற்ற அகதிகளை விரக்தியின் விளிம்புவரை கொண்டு சென்று விட்டது.

இவர்களின் எண்ணத் தவிப்புகளை, ஏக்கங்களை புரிந்து கொள்ளும் இதயங்கள் தமிழ் நாட்டில் எண்ணிக்கையில் குறைந்து கொண்டே வந்து விட்டதுதான் வேதனை.

இந்திய அரசுக்கோ தமிழக அரசுக்கோ ஈழ ஏதிலியர் பற்றி இப்போது நினைப்பதற்கே நேரம் இல்லை.

அவரவர்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள். அவற்றில் மூழ்கி மூச்சுதிணறி வெளியேறுவதற்குள் அவர்களுக்குப் பெரும்பாடாகி விடுகிறது. எனவே, இப்படி லட்சக்கணக்கானவரை அகதிகளாக வைத்துக் கொண்டிருக்கிறோமே என்று அவர்களுக்கும் வெட்கமில்லை,

ஈழப்போராளிகளைக் காரணம் காட்டி தமிழக அரசைக் கலைத்த மத்திய அரசும் கூட இன்று கவிழ்ந்து விட்டது.

இனி ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவது எப்படி என்பதே அவரவர் பிரச்சினை. அதற்கென அவர்கள் தேர்தல் வியூகம் வகுத்து களத்தில் இறங்கி விட்டனர். தமிழ் நாட்டிலோ தேர்தல் கள நிலைமை இன்னும் மோசம்.

தமிழ் நாட்டில் சட்டம்

என் இறைவா

காலமெனும் நதியிலே
கன்வுகளில் ஓடம் விட்டு
காலுதலும் காணா நீள்
கரையினிலே நிற்குமிந்த
கள்ளமில்லா உள்ளத்தின்
கண்களிலே பூத்த நீரை
மெல்லத்தான் துடைத்து நீ
வாழவை என் இறைவா?

"சுசி"

அவுஸ்ரேலியா

ஒழுங்கு சரியில்லை என்று கூறி திமுக கட்சியைக் கலைத்தவர்கள் தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க மறுநிமிடமேதேர்தல் ஏற்பாடுகள் குறித்து முடிவு செய்து அறிவித்தது உலக மகா வேடிக்கை.

சட்டம், ஒழுங்குசரியில்லை என்றால் தேர்தல் நடத்துவது எப்படி? பஞ்சாபில், அசாமில், ஜம்மு காஷ்மீரில் தேர்தல்நடத்த வராத துணிச்சல் தமிழ் நாட்டில் தேர்தல் நடத்த மட்டும் வந்தது ஏன்?

விவரம் தெரிந்தவர்கள் இதனை சுட்டிக் காட்டி கேட்டதும் ஈழப்போராளிகள் மீது பழி வந்து சேர்ந்தது. ஈழப் போராளிகள் மீது பழிபோட அவர்கள் தேடித்தேடி கண்டு பிடித்த காரணங்களும் மக்கள் மன்றத்தில் எடுபடவில்லை.

இதற்கெல்லாம் கவலைப் படாமல் தமிழக சட்ட மன்றத்துக்கான தேர்தல் வரும் மே. 26 என நாளும் குறித்தார்கள். அதே நாளில் தான் தாங்களும் தேர்தல் களத்தில் குதிக்க வேண்டிவரும் என அவர்கள் எதிர் பார்த்திருக்க நியாயமில்லை.

இந்தியாவின் இதர மாநிலங்களைவிட தமிழ் நாட்டிம் தேர்தல் காற்று சற்று அசுர வேகத்தில் வீசுவது உண்மை.

சரியான கோடைவெயில் ஒருபுறம் கொளுத்த, தாகத்துக் கூட தண்ணீர் கிடைக்காத ஒரு நகரத்தில் தேர்தலுக்கு நாள் குறித்திருக்கிறார்கள்.

தி. மு. க அரசு கலைக்கப் பட்ட உடனே அடுத்த முதல மைச்சர் செல்வி ஜெயலலிதா தான் என்று உற்சாகத்தில் நூறு சத உறுதி தொனிக்கக் குரல் கொடுத்தவர்களின் சுருதி இப்போது இறங்கி வருகிறது.

மத்திய அரசில் ஏற்பட்ட திடீர் அரசியல் குழப்பம் தமிழ் நாட்டிலும் எதிரொலித்து விட்டது. ஜெயலலிதாவிற்கே கூட உள்ளூர ஒரு பயம் வந்துவிட்டது போலிருக்கிறது. முதலமைச்சராகும் அவரது ஆசை கேள்விக் குறியாகிவிட்டது.

அதனை ஆச்சரியக்குறியாக்கும் அதிசயத்தை தி. மு. க வும் அதன் தலைவர் திரு கருணாநிதியும் நிகழ்த்தக் கூடுமா என்று உறுதியாகத் தெரியவில்லை. என்றாலும் திமுக மீண்டும் ஆட்சிக்கு வருவதோ செல்வி ஜெயலலிதாவை முதலமைச்சர் அரியாசனத்தில் ஏற்றுவதோ அடுத்த இரு மாதங்களில் திமுக வகுக்கும் அரசியல் வியூகத்தில் தங்கியுள்ளது.

தமிழக அரசியலில் நமக்கும் தனிப்பட்ட அக்கறை இருப்பதில் அதிசயம் எதுவும் இல்லை. அதன் வெற்றி தோல்விகள் ஈழ மக்களின் எதிர் காலத்தோடு தொடர்புடையது என்பதை நாம் மறந்து விட முடியுமா?

எஸ். எம். கார்மேகம்

சூரியச் சுடர்

பரவேந்தர் ஒரு நிலா
அந்தி வானத்தை
அலங்கரிக்கப் போட்ட
பந்தலின் மீது
பவனி
வந்த நிலா.
இந்த நிலா
வந்ததால்தான்
ஓட்டைப் பந்தலும்
ஒளிப்பந்தல் ஆகியது.
சூரிய பாரதிச்
சுடர் வாங்கித் தமிழ்வானில்
வீரியத்தோடு
ஏறிய வெண்ணிலா.

புதுக் கவிதைகள்

கனவுகளை நான் வெறுக்கிறேன்
அவை எத்தனை
அழகாய் இருந்தாலும்
நிழல்களின் ஒப்பந்தங்களை விட
நிஜங்களின் போராட்டங்களே
எனக்குப் பிடிக்கும்!

உன் தாய்
உன்னை அலங்கரிப்பது
ஆபரணங்களால் அல்ல...
என் அவஸ்தைகளாலேதான்!

✳

எங்கெல்லாம்
மானுடம் காயம் படுகின்றதோ
அங்கெல்லாம் பூக்கும்
சகோதர சோகங்களின்
சர்வ தேசியப் பூக்கள்!

✳

கல்லறை கீதங்கள் பாடி
நெகிழ்ந்திடக்
காலம் நமக்கில்லை
தோழர்களே—இனி
கைகளின் கீதத்தைப்
பாடி நடந்தெதிர்
காலச் சரித்திரம் நாம்
படைப்போம்!

✳

மண்ணில் வேரோடி
மாநிலத்தில் கால் பதித்து
வீசும் புயற் காற்றை
விழும் வரைக்கும்
நின்றெதிர்ப்பேன்
என் இதயத் தோட்டத்தில்
ரோஜாக்களைப் பயிரிட்டேன்
அறுவடை செய்ய
உன்னை அழைத்தேன்.
அரிவாளோடு
நீ வந்த பிறகுதான்
என் தவறு எனக்குப் புரிந்தது

★

இந்த பூமியின்
விளிம்பையே
தீண்டிவிடும் அளவிற்கு
என் விரல்கள் நீளமானவை
ஏனென்றால்
என் கைகள் வெறும் கைகளல்ல-
கவிதைகள்?

✳

மனிதர்கள்
தூங்கிய பிறகும்
வானத்தில் விளக்கெரிவது
மரங்களுக்காகவே!

✳

வெய்யில் தாங்காமல்
விரைந்து வரும் காலுக்குச்
சிறிது நேரச் செருப்புகள்.

-மு. மேத்தா

இந்தியாவிலேயே மிகக் குறைந்த வயதிலே திரைப்பட கதாசிரியராக அறிமுகமானவர் என்கின்ற பெருமை நமது வி. சி. குகநாதனைச் சேரும் என்பது நமக்கெல்லாம் பெருமை தரக் கூடியவிஷயம் எம் ஜி ஆரின் 'புதிய பூமி' படத்தில் கதாசிரியராக அறிமுகமாகும் போது குகநாதனின் வயது 18! குகநாதனின் இயக்கத்தில்... அதிக் பட்ச எதிர்பார்ப்புகளுடன் அடுத்து வெளிவர இருக்கும் படம் நடிகர் திலகத்தின் 'முதல் குரல். அண்மையில் வி. சி. குகநாதனை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது அவர் சொன்னார்.

''என்னால் முடிந்த அளவுக்கு தமிழின எழுச்சியையும் இனமான உணர்வுகளையும் எனது கதை, கதாபாத்திரங்களின் மூலம் சொல்லி வந்திருக்கிறேன். 'பேனா' என்கிற மகத்தான ஆயுதத்தின் ஆற்றலையும்; பூமியைப் புரட்டும் புரட்சி நெம்புகோலாக அதை மாற்ற முடியும் என்கிற உண்மையையும் நன்கு உணர்ந்தவன் நான். இன்று நான் இயக்குநராக எழுந்து நின்றாலும் அதற்கு அஸ்திவாரம் வரைந்து கொடுத்த பேனாவை நான் மறந்து விடமாட்டேன். அந்தப் பேனாவின் கதை தான் 'முதல் குரல்!' சமூக அநீதிகளையும்— அடக்குமுறைகளையும் பேனா எனும் புரட்சி ஆயுதத்தால் புறந்துரத்தப் புறப்பட்ட... தார்மீக எழுச்சி கொண்ட ஒரு பத்திரிகையாளனின் வாழ்க்கைப் போராட்டங்களையும் எதிர் நீச்சல்களையும் எனது 'முதல் குரல்' சித்திரிக்கும்.

'கலைக்குரிசில்' சிவாஜி அவர்கள் தாம் நடிக்காத பாத்திரமே கிடையாது என்று சொல்கின்ற அளவுக்கு நூற்றுக்கணக்கான பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்த 'கலா சிற்பி!' அவரிடம் நான் இந்தக் கதையைச் சொன்ன போது கதையை மிகவும் ரசித்துக் கேட்ட அவர்—

'குகநாதா! கதை ரொம்ப நல்லாருக்கே... அதுவும் அந்த 'ஜர்னலிஸ்டு' கேரக்டர் இதுவரைக்கும் நான் பண்ணாதது... பண்ணிடறேன் என்று ஆர்வத்துடன் சொன்னதை என்னால் மறக்க முடியாது என்றார்', குகநாதன்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு (சுமார் 5 வருடம்) சிவாஜியும், அவர் புதல்வரும் (பிரபு) இணைந்து நடிக்கிறார்கள். படம் 'நாங்கள்.' சென்ற வாரம் மாம்பலம் அப்பு ஹவுஸில் சிவாஜி, பிரபு, ஸ்ரீவித்யா, 'ராமாயணம்' தீபிகா சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டன. சிவாஜியை சுத்தமாக அடையாளம் தெரியவில்லை. பழைய நாகேஷைப் போல இளைத்து... ஒல்லியாக பார்க்கவே வேதனையாக இருந்தது. சிங்கப்பூர் பயணம் இந்தசிங்கத்தை இப்படிச் சோதித்திருக்க வேண்டாம். ஆனால் ஸ்ரீவித்யா முன்னிலையில் பிரபுவை விசாரிக்கும் அந்த ஒரே காட்சியில்... 'லபக்!' நடிப்பு சிங்கத்தின் கர்ஜனையும் கம்பீரமும் இன்னும்அப்படியே தான் இருக்கிறது!

'நாங்கள்' மிகக்குறுகிய காலத் தயாரிப்பாம். ஜூலை மாதம் திரைக்கு வருகிறது.

யாழ் சுதாகர்-

*

மலையாளப் படவுலகில் சூப்பர் ஸ்டாராக திகழ்பவர் மம்மூட்டி (முகமது குட்டி). ,கேரளாவை விட தமிழ் நாட்டில் தான் மம்மூட்டிக்கு ரசிக மன்றங்கள் அதிகம் அந்த விசுவாசமோ.

இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று
பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள்
உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று
பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின்
விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று
பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு
நிறுமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று
பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம்
பயிருக்கு வேர்!

தமிழ் எங்கள் இளமைக்குப்
பால்! - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க
புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு
வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச்
சுடர்தூக்கு தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத்
தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு
வயிரத்தின் வான்!
தமிழ் எங்கள் பிறவிக்குத்
தாய்! - இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க
உளமுற்ற தீ!

-பாரதிதாசன்

என்னவோ சென்னை அடையாற்றில் வீடு வாங்கி குடும்பத்தோடு வந்து இங்கேயே செட்டிலாகி விட்டார் மம்மூட்டி.

அதிகம் அலட்டிக் கொள்ளாத மம்மூட்டியின் 'சிநேக' நடிப்பும், கேமராவையே 'கேர்' பண்ணாத கேரக்டர் இன்வால்வ்மென்ட்டும் தமிழக ரசிகர்கள் மத்தியில் அவருக்கென்று ஒரு மரியாதையான இமேஜைக் கொடுத்திருக்கிறது. 'ஒரு வீடு இரு வாசல்' படத்தின் எதிர்பாராத தோல்வி பாலசந்தரை நிறையவே பாதித்திருக்கிறது. தமிழ் நாட்டின் சூப்பர் ஸ்டார்களின் கால்ஷீட் கிடைக்காத வேதனையில் மலையாள சூப்பர் ஸ்டார் மம்மூட்டியை கதாநாயகனாகப் போட்டு 'அழகன்' என்ற படத்தை இயக்கிக்கொண்கொண்டிருக்கிறார் கே. பாலசந்தர். சுஜாதா பிலிம்ஸ் ஜீ. வி. தயாரிக்கும் 'தளபதி' படத்திலும் இரண்டு ஹீரோக்களில் ஒருவராக மம்மூட்டி (முன்னவர் ரஜினி)!

மம்மூட்டியின் தமிழ் வரவு இங்குள்ள பல ஹீரோக்களுக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. அழகனும் தளபதியும் வெற்றி பெற்றால் இவர்களில் பலர் மோகனர்கவும் ராமராஜனாகவும் ரெஸ்ட் எடுக்க நேரிடலாம்.

அல்லது பத்திரிகைப் பேட்டியில் கன்னடத்தில் 4 படம், சமஸ்கிருதத்தில் 3 படம், பெயரிடப்படாத 2 தமிழ்ப்படங்கள் உட்பட 9 படங்களில் நடித்துக் கொண்டிருக்கின்றேன்... என்று 'ரீல்' விடு என்று காலத்தின் கட்டாயம் நிர்ப்பந்திக்கக் கூடும்.

✱

'புதிய பாதை', 'புது வசந்தம்' வரவுகளுக்குப் பின் தமிழ்ப் படவுலகில் ஒரு ஆரேக்கியமான மாற்றம்! லோ பட்ஜெட்டில்... 'டெக்னீஷியன்ஸ் வால்யூ' உள்ள படங்கள் நிறைய வெளிவருகின்றன. புதுமுகங்களின் வருகையும் அதிகரித்திருக்கிறது.

அதே சமயம் கோடிக்கணக்காக பணத்தை வாரி இறைத்து எடுக்கப்படும் படங்களை விட ஆடி வெள்ளி, துர்கா, தைப்பூசம், வைகாசி பொறந்தாச்சு... என்று லோ பட்ஜெட் படங்களெல்லாம் வசூலில் சக்கைப் போடு போடுகின்றன.

சமீப உதாரணம் 'நான் புடிச்ச மாப்பிள்ளை' கிராமத்து மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையேயான சில சென்டிமென்ட்ஸை வைத்து வெகு நேர்த்தியாகவும் சிறப்பாகவும் இப்படத்தை இயக்கியிருக்கிறார் வி. சேகர்.

சேகர், இயக்குநர் பாக்கியராஜிடம் உதவியாளராக இருந்து வந்தவர் என்பதாலோ என்னவோ நல்ல நகைச்சுவையுணர்வு, திரைக்கதையில் காய்களை நகர்த்தும் கச்சிதம், நுண்ணிய சென்டிமென்ட்ஸை வைத்து தாய்க் குலத்தை வளைத்துப் போடும் சாமர்த்தியம்... குருவைப் போல இவருக்கும் நன்றாகவே கை வருகிறது. ஹீரோ நிழல்கள்ரவி என்று சொல்லப்பட்டாலும் மாமனாராக வரும் ஜனகராஜ் தனது மாறுபட்ட குணசித்திர நடிப்பில் தாமே ஹீரோ என்கிற பிரமையை ஏற்படுத்துகிறார்.

✱

வேறு துறைகளில் இருப்பவர்கள் சினிமாத்துறைக்கு வருவதற்கும், பத்திரிகைத் துறையில் இருப்பவர்கள் சினிமாவுக்கு வருவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது! பத்திரிகைத்துறை முழுக்க முழுக்க சுதந்திரமான ஒரு துறை.

ஆனால் சினிமாத் துறையில் நிறைய 'சீதோஷ்ண அனுசரணை' தேவை. இந்த சீதோஷ்ண அனுசரணை என்பது பல சமயங்களில் தன்மானத்தில் கீறல்களையும் தனிப்பட்ட கொள்கைகளில் காயங்களையும் ஏற்படுத்தலாம். இவை எல்லாவற்றையும் மீறி பத்திரிகைத் துறையில் இருந்து, முரண்பட்ட இந்தத் துறைக்கு வந்து சிலர் சாதித்திருக்கிறார்கள் என்பது அவர்களின் தன்னம்பிக்கையையும் துணிச்சலையுமே காட்டுகிறது. சமீபத்தில் நான்கு பிரபல பத்திரிகையாளர்கள் படத் தயாரிப்பாளராக மாறி இருக்கிறார்கள். பத்திரிகையாளர் தமிழ்மணி தயாரித்து வெளியிட்ட 'சித்திரைப் பூக்கள்' வெற்றியுடன் ஓடிக் கொண்டிருக்கிறது. பிரபல சினிமாப் பத்திரிகையாளரும் மக்கள் தொடர்பாளருமான பீ.ஆர்.ஓ. நெல்லை சுந்தரராஜன் ஐஸ்வர்யாவை கதாநாயகியாகப் போட்டு 'பூமகள் ஊர்வலம்' என்கிற படத்தையும், 'கலைப் பூங்கா' ஆசிரியர் இராவணன் ரகுமான், சாந்திப்ரியா(நிஷாந்தி) நடிக்க 'சிரித்தாலே இனிக்கும்' படத்தையும் தயாரித்துக் கெகண்டிருக்கிறார்கள். சமீபத்தில் ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவரும் துடிப்பான இளம் பத்திரிகையாளருமான சுதாங்கன், முரளியை ஹீரோவாக வைத்து ஒரு படத்துக்கு பூஜை போட்டிருக்கிறார்.

இந்தப் படங்கள் எல்லாம் பெறும் வெற்றியைப் பொறுத்து இன்னும் பல பத்திரிகையாளர்கள் படமெடுக்க வரக்கூடும்.

✱

நகைச்சுவை நடிகர் 'வெண்ணிற ஆடை' மூர்த்தியின் பார்வை இப்போது பண்டைத் தமிழர் வாழ்வியல் நெறிகள், மற்றும் இந்து மதத் தத்துவங்கள் பக்கம் திரும்பி இருக்கிறது.

இவை சம்பந்தமாக வெ.ஆ. மூர்த்தி ஆய்வு செய்து எழுதிய இரண்டு திறனாய்வு நூல்களை சிங்கப்பூரில் உள்ள தமிழ்ப்பதிப்பகம் ஒன்று விரைவில் வெளியிட இருக்கிறது. சிங்கப்பூரில் அந்த நூல்களுக்கு எடுத்த எடுப்பிலேயே ஆயிரக்கணக்கில் ஆர்டர்கள் வந்து குவிந்துள்ளதாம்.

யாரோ சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது. 'தமிழகத்துக்கு வெளியே தான் தமிழ் வாழ்கிறது!'



❋ இன்று நீங்கள் அனுப்பிய 'அக்கினிக் குஞ்சு' வந்தது. முழுவதும் படிக்க வில்லை இன்னும். (சனி ஞாயிறுகளில் தான் புத்தகங்கள் படிக்க பொதுவாக நேரம் கிடைக்கும்) ஆனால், மேலால் பார்த்த போது அதன் அமைப்புப் பிடித்தது, 'அக்கினிக்குஞ்சு'க்கு உரியவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். பாராட்டைத் தெரிவியுங்கள்.

அரவிந்தனது கவிதையை இரண்டாவது முறையாக 'குஞ்சு'வில் படித்தேன். முதல்தடவை படித்ததை விட, இரண்டாவது தடவை படித்த போது- அதில் 'கனம்' கூடியிருப்பதாக ஓர் உணர்வு, (கவிதையை, காட்டமாக சிகப்பு நிறத்தில் போட்டது நல்ல ஐடியா!)

அத்துடன் அதில் படித்த இன்னுமொரு சுவைத்த விஷயம் 'மண்வாசனை இலக்கியம்'. பேச்சு வழக்கால் ஏற்பட்ட குழறுபடியை அத்துணுக்கில் ரசித்தேன்.

மற்றவைகளை பின்னர் படித்து அபிப்பிராயம் எழுதுகின்றேன். **ஏ. முகுந்தன்**

ஃபிளோரிடா **அமேரிக்கா**

❋ அக்கினிக் குஞ்சுவின் மூலம் முதல் உங்களிடம் வருகின்றேன். பெயர் தெரிவு மிகவும் அற்புதம். ஆனால், அதை தாங்கள் பாரதி சொன்னதுபோல் இருண்டு கிடக்கும் தமிழ் பொந்திடை வைக்க வேண்டும். அது பற்றி எரிந்து உண்மையை அவர்களிற்குக் காட்டவேண்டும்.

'அக்கினிக் குஞ்சு' விலுள்ள ஒவ்வோர் விஷயமும் பொறியாகவே வந்துள்ளது. இதில் 'அனலும் மலரும்' நன்றாகவே உள்ளது. முற்போக்கு எழுத்தாளர்களின் அரசியல் மூலாம் பற்றி வரவேற்கத் தக்க முறையில் வெளிவரச் செய்யப் பட்டமை நன்றே, இதே பகுதியில் தங்களின் அகில உலக ஆனைப்பந்தி தமிழ் காங்கிரஸ் கட்சி என்ற சொற்பத நையாண்டித்தனம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

தமிழச்சி தரிசனத்தில் சமர்ப்பணம் யாருக்கு என்பதில் கலா மோகனின் அனைத்துலகத் தனமும், அதனில் தமிழர்களில் ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற பொதுப் பொறுப்பும் விளக்கப்பட்டுள்ளது நன்மையே.

யாழ்ப்பாணத்து மண்ணின் பிறவி நான். தங்களின் ஈழத்தமிழர் அரசியல் : ஒரு சாட்சி என்ற கட்டுரையில் வந்த அந்தப் பழைய யாழ்ப்பாணம் என்னுள் படமாய் விரிந்து ஓடுகின்றது. அதே யாழ்ப்பாண சொற்பதங்கள் அற்புதம். ஊரை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் ஆகியும் தங்கள் அக்கனிக் குஞ்சினூடாக ஊரோடு ஒட்டி விட்டநிலையை உணர்ந்தேன்.

வை. சத்தியகுமாரன்
ஜேர்மனி

❋ அக்கினிக்குஞ்சு வின் அட்டைப்படம் ஆப்செட் போன்று தோற்றமளித்தது. உள் அமைப்புகளும் பல காலம் வெளி வந்து கொண்டிருக்கும் சஞ்சிகையோ என எண்ணத் தோன்றியது.

ஈழத் தமிழர் அரசியல் கட்டுரை என்போன்ற வாலிபர்களுக்கு புதிய தரிசனத்தை வழங்கியது.

தோணி சிறுகதை முன்பும் படித்துள்ளேன். இப்போது படிக்கும் போதும் எந்த அலுப்பும் இல்லாது கதை சுவரஸ்யமாகச் செல்கின்றது. பக்கங்களை அதிகப்படுத்தி மேலும் ஒரு கதை போட்டால் நல்லது. **எஸ். ரவீந்திரன்**

பாரீஸ்

நான் உன்னைத் தேடுகிறேன்

3 மாவிட்டபுரம் மதவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மெல்போர்னில் வசிப்பவருமான **குணரட்ணம் நடராசா** என்பவர் ('ஆஷா' என்று நண்பர்களால் அழைக்கப்படுபவர்) மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலடியைச் சேர்ந்த **ஆலால சுந்தரம் தயாளன்** என்பவரை கடந்த எட்டு ஆண்டுகளாகத் தேடுகிறார் இருவரும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஒன்றாகக் கல்வி பயின்றவர்கள்.

4 மாங்குளம் தச்சடம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது மெல்போர்னில் வசிப்பவருமான **குலசேகரம் ஸ்ரீ காந்தன்** தன்னுடன் புதுக் குடியிருப்பு மகா வித்தியாலத்தில் ஒன்றாகக் கல்வி பயின்ற புதுக்குடியிருப்பைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட **பொன்னர் தர்ம ஆனந்தனை** கடந்த பத்து ஆண்டுகளாக தேடுகின்றார்.

5 என் அருமைத் தோழி **சுஜா**,

நான் உன்னைத் தேடுவதை நீ அறிவாயா? எட்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதா? பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில், நாங்கள் ஆறாம் வகுப்பில் மாணவிகளாக இணைந்தோம். பின்னர், எங்கள் கல்வியைப் பெருக்கிக் கொள்வதற்காக பருத்தித்துறைக்கும் நெல்லியடிக்கும் இடையில் சிட்டுகளைப் போல. சைக்கிள்களிலே இருவரும் ஓடித் திரிந்த இனிய நினைவுகளை நான் மறக்கவே இல்லை, உன்னைப் பிரிந்து அவுஸ்ரேலியாவுக்கு வந்த பின்னரும் கடிதங்கள் மூலம் நமது நட்பினை வளர்த்தோம். இன வாதப் போர் நமது மண்ணை எரித்த பொழுது நமது நட்பையும் தகர்க்கும் என்று நான் கனவிலும் கருதவில்லை. இன்று நீ எங்கே இருக்கிறாய்? ஈழ மண்ணிலே தானா? இந்தியாவிலே தஞ்சம் அடைந்துள்ள ஆயிரமாயிரம் அகதிகளுள் நீயும் ஒருத்தியா? உன் இரத்த உறவுகள் லண்டனில் வாழ்வதாக சொன்னாயே? அங்கே சென்று விட்டாயா?

இதன் மூலம்அல்வாயைச் சேர்ந்த **சுஜா நவரத்தினத்தை**, நெல்லியடியைச் சேர்ந்த செல்வி **சிவரூபினி கனகசபை** மெல்போர்னிலிருந்து தேடுகின்றார்,

தொடர்பு கொள்ளும் முகவரி
C/o AKKINIKUNCHU,
P.O. BOX 470. MOORABBIN.
VIC. 3189 AUSTRALIA.

MULLAI VIDEO VISION

Live Video Recording Specialists
in
WEDDINGS
BIRTHDAYS
MUSICAL PROGRAMMES
ANY OTHER FUNCTIONS
at
Competitive Rates

Contact SIVA for friendly service.

2 OTFORD CLOSE
MOORABBIN
VICTORIA 3189
PHONE (03) 555 9985

With the best compliments from :

RAVI, JAMES & ASSOCIATES

BARRISTERS & SOLICITERS

All leagal work including.....

FAMILY LAW
IMMIGRATION
PERSONNEL INJURIES

WORK CARE
GENERAL / COMMERCIAL LITIGATION
CONVEYANCING

SALES / PURCHASE BUSINESS
LEASE, WILLS AND PROBATE
INSURANCE & FINANCIAL SERVICES

The expertise to help you with all
your legal, insurance and financial needs

Telephone : 388 2091 Fax : 388 2092

558 Sydney Road,
Brunswick, Vic 3056
Australia

Contact : S. RAVEENDRAN - A. H. 497 3738



CAPITAL AUTOS

உங்கள் வாகன

திருத்த வேலைகள் எதுவாயினும்

உங்கள் திருப்தியே

எங்கள் சேவையாகும்.

CAPITAL AUTOS

311 SPROWSTON MEWS FOREST GATE, LONDON, E7 9AE

(REAR OF 311 ROMFORD ROAD)

TEL : 519-6187

Printed and Published by M A. Rahman at AR prints, 375-8, Arcot Road, Madras-600 024 on behalf of PRIYA PUBLICATIONS, AUSTRALIA. Editor : YAL. S. BASKAR